தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 25 புதிய காசு | வெளிநாடு 30 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, வைகாசி 9 (23-5-'59). சனிக்கிழமை | இதழ் 49

★

சிட்டு

தித்திக்கும் முக்கனி! எத்திக்கும் சுவை மணக்கும் புகழ்மணி! ஆடற் கலையின்தேன் துளி! அழகு நிலாவின் மாலைப்பொழுது உலா! சிட்டு எனும் இவள், பட்டுமேனிக் கட்டுடலாள்; பவளவாய்ச் செவ்விதழாள்! தொட்டணைத்த அடலேறு - தொல்குலத்தின் புகழ்வீரன் முத்தமுகின் உளத்திருப்பாள்; விழையும் மனத்திருப்பாள்!

''கச்சணிந்த சிற்பமாதர்
காற்சதங்கை போர்முழங்கி,
காவியங்கள் செய்த''

எங்கள் ''சிவகெங்கைச் சீமை''யின் சரிதம், இவள் சரிதம்! அதை உள்ளே காண்க.



★

"சிவகெங்கைச் சீமை" - சிறப்பிதழ்

படத்தைத் தந்தவர்கள்

'சிவகெங்கைச் சீமை''— திரைப்படத்தை உருவாக்கியுள்ளோர் சிலரை இங்கே சந்திக்கிறோம்.

டைரக்டர்-கே. சங்கர்

திறமை மிக்க தொகுப்பாளராக (எடிட்டராக) நீண்ட காலம் பணியாற்றியவர். இருபத்தைந்தாண்டுகள் பட உலக அனுபவம் பெற்றவர். ஏ. வி. எம். தயாரித்த பல மொழிப் படங்கள் சிலவற்றை டைரக்ட் செய்து புகழ்பெற்றவர். அண்மையில் வெளிவந்த 'பக்த ராவண' 'ஒரே வழி' முதலிய படங்களை உருவாக்கி மக்களின் மதிப்பைப் பெற்றவர்.

முதலில் படப்பிடிப்பு; பின்னர் படத் தொகுப்பு (Editing) என்பது நடைமுறை. இவரோ தொகுக்கப்பட்ட படத்தின் தரத்தை படப்பிடிப்பிலேயே தந்துவிடுவார், டைரக்ஷன் திறமையால். கதையைக் காட்சியின் வாயிலாகச் சொல்லும் நுட்பம் நல்ல முறையில் படமாக்கப்பட வேண்டும் என்று நினைத்தால், அந்தக் கதாசிரியர் சங்கரை அணுகினால் மேற்சொன்ன சிறப்படையலாம். கதாசிரியரால் விளக்கப்படுவதைவிடத் தெளிவான முறையில் காட்சியமைப்பில் விளக்கிவிடுவார் படத்தின் கருத்தை. தொகுப்புக் கலையில் ஒப்பற்றவர். ஆமை வேகத்தில் நகர்ந்து செல்லும் படங்களைக்கூட இவரது கத்திரிக்கோல் முயல் வேகத்தில் ஓடச் செய்ததுண்டு.

★

காமிரா-தம்பு

ஜெமினியின் முத்திரையைத் தன் வித்தையில் குத்திக்கொண்டவர். ''வசதியும் வாய்ப்பும் தந்தால் ஹாலிவுட்டையும் அறை கூவுவேன்!' என்பார். இவர் ஒளிப்பதிவு செய்தளித்த களிப்பூட்டும் காட்சிகளை, வஞ்சிக்கோட்டை வாலிபன், ஒளவையார் முதலிய படங்களில் காணலாம். டைரக்டர் மனப்பாங்கைப் பிரதிபலிக்கும் கலைக் கண்ணாடி இவரது காமிரா. வரலாற்று ஓவியங்களைப் பொறுமையாகத் திறம்பட வடித்தெடுக்கும் வண்ணக் கலைஞர் இவர்! ஆசிரியரின் எழுத்தையும் டைரக்டரின் கருத்தையும் உணர்ந்து, அவற்றிற்கு மேலும் மெருகூட்டும் ஒளிக் கலைஞர் இவர். பட உலகில் இருபது ஆண்டுகளைக் கடந்த பழுத்த கனி இவர். ''சிவகெங்கைச் சீமை''யில் செஞ்சிக்கோட்டைக் காட்சிகளைச் சிறப்பாக, தெளிவாகப் படமாக்கியுள்ளது இவர் திறனுக்கோர் எடுத்துக் காட்டு! முத்தழகும் முகமூடிக்காரனும் தண்ணீருக்குள் சண்டை போடும் காட்சியையும் திறம்பட எடுத்துள்ளார்.

★

இசை-விஸ்வநாதன்-இராமமூர்த்தி

தென்னகம் வியக்கும் தேனிசைக் கலைஞர்கள்! சுந்தரகானம் தந்த சுப்புராமன் புகழ் வழியோர்! இசையமைக்கையில் இவர்தம் கருத்தில் தங்கும், கதைப்போக்கும், காட்சியமைப்பும்! அதைக் கேட்கும் மக்கள் இதயத்தில் துள்ளும் மகிழ்ச்சி; மணக்கும் சுவை! இசையின் இரு கரங்களான இவ்விரட்டையர் கைபடின், இங்கே முழவதிரும்; குயில் கூவும்; கிளி பாடும்; மயில் அகவும்; அருவி சிரிக்கும்; உலகத்தின் இனிமை எல்லாம் உங்கள் முன்நிற்கும்! இப்படத்தில் இவர் படைப்புக்கள், 12 பாட்டுக்களுக்கும் 2 விருத்தங்களுக்கும் ஆகும்.

★

கலை-பாலு

மண்மேடா? மாளிகையா? மலர்ச்சோலையா? எரிமலையா? எது வேண்டும்? சொல்லுங்கள்—சொன்ன மறுவினாடியே அத்தனையும் சமைத்துக் காட்டும் அற்புதக் கைத்திறமைக்காரர் இவர். மூங்கில்தட்டி, பழங்காகிதம், மரப்பலகைகள்—இவைகள் இருந்தால் போதும்; காலத்தை காட்டும், கதையைப் பாடும், கட்டடங்களைச் சமைத்துவிடுவார்! வண்ணக் கலவையையும் அழகுத்தூரிகையையும் ஏந்திவிட்டால் உருவெடுக்கும், பேசும் சித்திரங்கள்; பாடும் சிற்றுறுகள். ஏன்? சுருங்கச் சொன்னால், சித்திரத்திற்கோர் ரவிவர்மா! செழிக்கும் கைத்திறத்திற்கோர் பாலு! சினிமா உலகமே புகழ்கிறது. இனி யாருண்டு, இவரை வெல்ல?

★

ஆடை அணி மணிக் கலைஞர்-ஆர். சி. லிங்கம்

1000 ஆண்டுகளுக்கு முந்திய கதையா? இன்றைய நாளின் கதையா? ஆங்கில பாணி உடையா? செந்தமிழர் தனி உடையா? குமரிக்குத் தேவையா? கிழவிக்குத் தேவையா? பட்டத்து அரசனா? பாட்டாளி மகனா? எவ்வகையில் தேவையோ அவ்வகையில் கற்பனைக்கண் கூட்டி, செத்தொழிந்த காலத்தைச் சீராகப் படைத்தளிப்பார்.

காலத்துக்கும், கதைக்கும், உடலுக்கும் பொருந்தும்படியாக ஆடைகளையும், ஆபரணங்களையும் தயாரித்துத் தனிப்புகழ் படைத்தவர்.

''சிவகெங்கைச் சீமை'' படத்திலே நீங்கள் காணும் ''கடந்த காலம்'' இவர் திறமைக்கோர் சான்று.

நவநாகரிக பாணிமிகு ''மாலையிட்ட மங்கை''யும் கடந்த கால வாழ்வை விளக்கும் ''சிவகெங்கைச் சீமை''யும், இவரது சீரிய செயல்திறனை விளக்கும்.

★

ஒப்பனைக் கலைஞர்-எஸ். பி. சிவராமன்

பேசும்பட உலகிலேயே மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள தொழில் ஒப்பனைக்கலை. அக்கலையில் சேர்ந்தவர்கள் பலர். அவருள் ஒருவர் இவர். தமிழகத்திற்கு (திரு. தி. க. சண்முகம் அவர்களை) ''ஒளவை''யாரை அறிமுகப்படுத்தி மக்களையெல்லாம் மெய்சிலிர்க்க வைத்த பெருங்கலைஞர் இவர். ஒளவையை அறிமுகப்படுத்தியதால் இவரும் திரைப்படத் தொழிலில் அறிமுகப்படுத்தப்பட்டார். பல படங்களில் இவர் கைத்திறம் கண்டோம். இப்போது சிவகெங்கைச் சீமை படத்தில் இவர் நுண்கலையைப் பார்க்கிறீர்கள்.

சிவகெங்கைச் சீமையை முடித்ததும் சீமைக்கே (மேல்நாட்டுக்கு) புறப்படும் வாய்ப்புக் கிடைத்துவிட்டது இந்தக் கலைஞருக்கு. நாட்டியப் பேரழகி வைஜயந்தியுடன் தன் கலையை மேலைநாடுகளில் விளக்குவதற்கு மேற்குச்சீமைக்குப் புறப்பட்டுப் போயுள்ளார். தமிழ்மணத்தோடு கலை மணத்தை அங்கு வழங்கி, வாழ்த்துப் பெறுவார்கள். இவர் வெளிநாடு செல்லும் முதல் ஒப்பனைக் கலைஞரும், ஆவார்.

நாடு காணமட்டும் இவர் மேல்நாடு புறப்படவில்லை. தமிழகக்கலையை அங்கு விளக்கவும், அங்கிருக்கும் கலையைக் கற்று வரவுமே சென்றுள்ளார்.

★

தயாரிப்பு நிர்வாகி-வீரய்யா

கலைக்கோட்டை கண்டெடுத்த தேவகோட்டை வீரய்யா, நம் தயாரிப்பு நிர்வாகி; தளரா உழைப்பாளி. இரவு என்றால் மதி வரும்; பகல் என்றால் கதிர் வரும்; ஆனால் அழைத்தபோதெல்லாம், இவர் வருவார்.

இரவு பகலென்ற இயற்கையின் நியதிக்கு மாறுபட்டு, சிவகெங்கைச் சீமையை உருவாக்கியவர். சிந்தையெலாம் இனிக்கும் எண்ணமும், செவ்விதழெங்கும் பொங்கும் சிரிப்பும் கொண்ட தனித் தன்மையார். சில நடிகர்களிடம் முன்னேற்பாடாகக் ''கால்ஷீட்'' வாங்காமல் இருந்தும், திடீரென்று படப்பிடிப்பு நேரும்போது அவர்களை அழைத்து வந்த பெருமையும் திறமையும் இவருக்கே உரியன. சொல்லிலும் செயலிலும் சுறுசுறுப்புடையார்; வில்லின் கணையிலும் விரைவுடையார்!

★

தமிழ்ப்பித்தன்-சுந்தரம்

டைரக்டரின் வல விழியும் இடவிழியும் ஆவர் இவ்விரட்டையர். புதுமைகமழ் மதுரைநகர் தந்த ஒளிமுத்து தமிழ்ப்பித்தன். விழுப்புரம் அடுத்த வெள்ளையார்பட்டுத் தந்த வழுவில் மனிதர், சுந்தரம். காப்பி எடுக்க வேண்டுமா? காட்சியை விளக்க வேண்டுமா? வந்தவருக்கு வரவு கூறி, வருவோர்க்கு வழிகாட்டி படம் வளர்த்த பெருமைக்குரியோர், இவ்விருவரும் ஆவர். ஆற்றல் மிக்க அன்புப் படை இது.

★

நாராயணன்

டைரக்டரின் உடனிருந்து, அவர் காட்சியை வகுக்கும்போதும், எடுத்தவற்றைத் தொகுக்கும்போதும் உதவியவர். துடிப்புள்ள இளைஞர்; தொழிலில் அக்கறை உள்ளவர்,

★

மொத்தத்தில்...

19 பாடல்கள் உள்ள ''மாலையிட்ட மங்கையை'' ஆறு மாதத்திலும் 14 பாடல்கள் உள்ள மிகச் சிறந்த வரலாற்று ஓவியமான ''சிவகெங்கைச் சீமை''யை எட்டு மாதங்களிலும் முடிப்பதற்கு இரவு பகலாகத் தொண்டாற்றி வரும் கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் ஊழியர்கள், அயராத உழைப்பாளிகள். இரவு சென்னையில் படப்பிடிப்பு; விடிந்தால் திடீரென்று செஞ்சியில் படப்பிடிப்பு; திரும்பி வந்தும் படப்பிடிப்பு! அத்தனையையும் நிறைவேற்றிக் கடமையை முடித்தனர்; புகழை வளர்த்தனர்.

புடம் போட்ட தங்கக் கம்பிகளாய், சுழன்று உழைத்த அத்துணைப் பேரும் நம் பாராட்டுக்குரியோர்; வாழ்த்துக்குரியோர்; வாழ்க! வாழ்க! வாழ்கவே!

பாராட்டைப்பெற்றவர்கள்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 ‖ 23—5—59 ‖ இதழ் 49

கலையும் கழகமும்

ஆய கலைகள் அறுபத்திநான்கினையும் ஆராய்ந்தறிந்து, அவற்றைப் புரந்தருளி, பின் அறுபத்தைந்தாவது கலையில் தம் திருக்கரத்தைச் சிலர் வைத்திருக்கும் காலம் இது. அதாவது நல்லது நல்லதாகவே வளர்ந்தால், இந்தச் சில பிறவிகளுக்கு உடல் எரியும்; கரம் அசையும்; விழி சிவக்கும்; மீசை **துடிக்கும்!** இப்பிறவிகளின் புதுமைத் திருவிளையாடல்களால், எழுந்த சில சிக்கலான நிலைகளால்தான் இதை எழுதுகிறோம்.

இவர்கள் கொடி தூக்கியதோடு இருந்திருந்தால்...தோள் வலிக்கத் தூக்கியதற்குக் கூலி பெற்றதோடு இருந்திருந்தால்...தொண்டை கிழிய, பெற்ற கூலிக்குக் கத்தியதோடு இருந்திருந்தால், கவலையில்லை நமக்கு. ஆனால் "நடக்கப் பழகிக்கொண்ட இந்தப் பிணங்கள்" கழகத்தின் கலைத் தொண்டிற்குக் களங்கம் கற்பிக்க வந்ததால்தான், இந்த வாதம் எழுகிறது.

அரசியலும் கலையுலகும் தனித்தனி; அண்ணனும் தம்பியும்போல. இரண்டும் தனித்தனி என்றாலும் ஒன்றுக்கொன்று இணைந்து போக முடியாததல்ல.

"கலையில் அரசியலைப் புகுத்தி அதன் பத்தினித் தன்மையைக் குலைக்கின்றனர்! தம் தன்னலத்திற்கு எதையெதையோ பயன்படுத்துகின்றனர்! சுயநலத்திற்காக, அரசியலைக் கலையில் கலந்து, கலைக்கூடத்தைக் களைக் காடாக்கிவிட்டனர்! அரசியலைக் கலையில் புகுத்தலாமா?" என ஓலமிடும் தொல்லைத் தளபதிகளே! உங்களுக்குச் செவி இருந்தால்-மானம் இருந்தால்-சற்றே திருப்புக கவனத்தை! அண்ணனும் தம்பியும் ஒருவருக்கொருவர் உறவாடுவது தவறு? கலைஞரணி தனக்கு வேண்டியதை அரசியல் வாதியிடமும் அரசியல் வாதி தனக்கு வேண்டியதைக் கலைஞனிடமும் அன்றுடம் பெறுவதை அறியோமா? கலைஞரது வாழ்க்கைப் பிரச்னைகளை அணுகி அறிந்து ஆவன செய்யவில்லையா அரசியல் வாதிகள்? அரசியல் வாதிக்குத் தான் செய்யவேண்டியதைச் செய்யவில்லையா கலைஞரணி? ஆனால் பயன்படுத்திய முறைகள்தான் வெவ்வேறு. சோறு கண்ட இடத்தையே சொந்த வீடாக்கிக்கொள்ளும் நீர், உம் சொந்த வாழ்வு தழைப்பதற்கே கலைஞர் எனப்படும் சிலரைப் பயன்படுத்தினீர். புகழ் பாடுவோரைக் கண்டால் அவரே புதுமைச் சிற்பி என்று உச்சி மேற்கொள்வார் சிலர் உம்மை - உம் தொண்டை(யை)ப் பயன்படுத்திக்கொண்டனர். இப்படித் தனி வாழ்வுக்காக உம் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட நீர், விழியை அகலத் திறந்து பாரும்! கழகம் கலைஞரணியைத் தன்னோடு அணைத்துக்கொண்டிருக்கிறது. எப்படி? தன் புகழ் பாடவா? இல்லவே இல்லை! கழகத்துக் கலைமணிகள் அத்தனைப்பேரும் தியாக வடிவான தூய தொண்டர்கள். புயல் வீசியபோது மதுரைப் பகுதிகளிலே வந்து, நிதி திரட்டிக் கொடுத்தோர் யார்? கைத்தறியாளர் கண்ணீர் துடைக்க, துணிமூட்டையுடன் வீதி வீதியாய்ச் சுற்றியோர் யார்? கல்வி நிதிக்காகக் கணக்கற்ற தொகையைத் **தம் சொந்தப் பணத்திலிருந்து** தந்தோர் யார்? நடிகர் சமுதாயத்திடையே நெருங்கிய ஒற்றுமையையும், பிணைந்த அன்பையும் தழைக்கச் செய்தோர் யார்? செய்வோர் யார்? கழகத்தை அவர்கள் சொந்தப் புகழ்பாடப் பயன்படுத்தியதில்லை, என்றும்! கழகமும் தன்னல நோக்குடன் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டதில்லை என்றும்! இதை உணராமல் "கலைஞரணியைப் பயன்படுத்திக்கொண்டு கழகம் அரசியல் பிரச்சாரம் செய்கிறது!" என்கிறார். **ஊர்ப்பணத்தில் தேரோட்டும்** அவருக்கு ஒருசில உண்மைகளைச் சொல்லுவோம்.

"கலைமக்களுக்கே!" என்ற பொன்னான தத்துவத்தை ஒப்புவோர் அனைவரும், தமது கலைப்படையல்மூலம் மக்களுக்கு நல்லன சிலவற்றையாகிலும் தரக் கடமைப்பட்டுள்ளனர். கழகத்தவர் தம் கலைப்பணிகளில் நல்ல கருத்துக்களை-நாட்டுக்குத் தேவையான நீதிகளைத் தருகின்றனர். அவை பிடிக்காததால்-தம் போக்குக்கு மாறுபட்டிருப்பதால் கொதிக்கிறார் அவர்.

ஆனந்தாஸ்ரமம், பாலயோகினி, கீதகாந்தி, மாத்ருபூமி, மின்னல்கொடி, நாம் இருவர்போன்ற படங்களில் "காங்கிரஸ் வாடை" வீசவில்லையா?

ஆஸ்திகச் சிங்கங்கள் எழுதிய படத்தில் அர்த்தமிருக்கிறதோ-இல்லையோ, அன்னார் விரும்பியவை புகழப்படவில்லையா? இதற்குச் சான்றுகள் கூறினால், ஏடு கொள்ளாது!

ஏன்? இந்தத் "தலைவ"ரின் பெயரைத் திரையில் சொல்லமாட்டார்களா என்று ஓடி ஓடி அலைந்திருப்பாரே இவர். குண்டுச்சட்டிக்குள்ளே குதிரை ஓட்டும் இவருக்கே இத்தனை வீராப்பு என்றால், கிண்டித் திடலில் குதிரை ஓட்டுவோர்க்கு அத்தனைத் தீரமிருக்காதா? இவர் பேசுகிறாரய்யா. "ஆகா! அண்ணாத்துரை ஆட்கள் ராஜபாட்டையில் குதிரை ஓட்டுகிறார்கள்! அய்யோ, அநியாயம்! அநியாயம்!" என்று. உமக்கு மரக் குதிரைகூடக் கிடைக்கவில்லையென்றால், வலுவுள்ள பிறர்-குதிரை கிடைத்த பிறர், நாட்டு மக்கள் இன்னலைத் தீர்க்கக் குதிரையை விரட்டக்கூடாதா? கூடாதுஎன்றும் இவர், தரையில் நின்றுகொண்டு சொன்னால் கவலையில்லை! அய்யனார் கோயில் குதிரைமேல் இருந்துகொண்டு அதை நம்பிக் கொக்கரிக்கிறார்.

"கலையில் அரசியலா?" என்று கேட்கும் இந்த விந்தை மனிதர், கலைஞர்கள் வீட்டு வாசலில் நின்றுகொண்டு அழைப்புக் கிடைக்காதா என்று காத்துக் கிடந்தார். அதைக் கலைஞர் வீட்டுப் படிகளறியும்; காவல் நின்றன அறியும். எங்கேயோ இடத்தைப் பிடித்துக்கொண்டவுடன் "ஆகா! நான்தான் இந்தக் கதைக்கே 'அத்தாரிட்டி' என்பதுபோல் முழக்கிக் கிழிக்கிறார். கால காலமாய்த் துன்பப்பட்டு வரலாற்றுச் சுவடிகளை ஆய்ந் தெடுத்துத் தொகுத்துத் தந்த பாண்டிய வீர மகனார் மேலமாசி வீதியில் இருக்கிறார். அவரது உழைப்பைத் திருடி உறிஞ்சித் தின்று கொழுத்தோர், இன்று, ஊருக்கு உபதேசம் செய்கின்றனர். தாங்கள்தான் "அத்தாரிட்டி" என்று தம்பட்டம் அடிக்கின்றனர். அறுபத்துநான்கு கலைகளையும் கரைத்துக் குடித்து அலுத்தபின் அறுபத்தைந்தாவது கலையாம், திரைக் கலையையும் இரட்சிக்க வந்த இந்தத் "தெருத் தூத"ரை நீங்கள் எங்கேனும் கண்டால் இதைச் சொல்லுங்கள்!

கலை உலகம் எண்ணிலாச் சிக்கல்களினால் தத்தளிக்கும் காலம், இக்காலம். கச்சா பிலிம் கிடைக்கவில்லை. வெளியிடும் தேதிகளில் நிகழும் போட்டிகளால் உண்டாகும் தொல்லைகள் வேறு. இத்தனை தொல்லைகளால் கடன்பட்ட நெஞ்சங்களுடனும் கவிழ்ந்த தலைகளுடனும் உருவாகி வரும் வேதனைக் காடுகள் பல. இவற்றோடு கழகத்தவர் எடுக்கும் படங்களுக்கு எங்கெங்கிருந்தோ, எப்படியெப்படியோ, எதிர்ப்புக்கள் வருகின்றன. தந்தி அடிக்கின்றனர்; தகராறு செய்கின்றனர்; தளர்ந்துவிடுவோம் எனப் பகற் கனவு காண்கின்றனர். பாவம், அவர்களுக்கு ஓர், அய்யோ! கழகத்தவர் படம் எடுத்தால் கலந்திருக்கிறது அரசியல் என மொத்தமாகக் குற்றம் சாட்டிவிடுகின்றனர். இது சரியா? மேலே குறிப்பிட்டவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் காலத்தின் நிலை தெரியும். கழகத்தின்நிலையும் புரியும்!

கழகம் கலையின்மூலமாகத்தான் வளரவேண்டும் என்பதில்லை. கலையின் மூலமாகவும் அது தன் கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் தவறில்லை! காலம் சொல்லும் பாடம் இது.

தொழிலில் நெருக்கடிகள் மிகுந்த நாள் இது. அதில் இப்படி ஒரு புது நெருக்கடியையும் உண்டுபண்ணாதீர்!

ஒரு படத்திற்கு இடையூறு செய்வது என்றால் அதற்கு உழைத்த நூறு நூறு குடும்பங்களின் பகையைத் தேடிக்கொள்வதாகத்தான் பொருள்! அதிலும் ஒரு கருத்துச் சித்திரத்தினைக் கெடுக்க நினைக்கின்றீர் என்றால், வலிவுள்ள-பொலிவுள்ள - வளமுள்ள-நல்ல திறமுள்ள ஒரு அணியை எதிர்க்கின்றீர் என்று பொருள்! எச்சரிக்கிறோம்! எதிர்ப்பிலே வளர்ந்த நாங்கள் எச்சரிக்கிறோம்! கத்தியையும் வேலையும் கண்டுகூட மருளாத நாங்கள், கத்தரிக்கோலையும் அதைப் பிடிக்கத் தூண்டும் வஞ்சமதியையும் கண்டா அஞ்சுவோம்! நீங்கள் நீடூழி வாழவேண்டுமானால், உங்கள் பெயரை - அப்படி ஒன்று இருந்தால்-காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் வழி விடுக; வழி விடுக! இன்றேல்... ★

திருத்தம்

இவ்விதழ் எட்டாம் பக்கத்தில் முதல் பாராவில் "முத்தழகு குற்றவாளிகளைப் பிடித்துத் தந்து நீதிக்கு **அரண் செய்தான்**" என்றிருப்பதை "முத்தழகு குற்றவாளிகளைப் பிடித்துத் தந்து நீதிக்கு அரண் **செய்வதாகச் சொன்னான்**" என்று திருத்தி வாசித்துக்கொள்க. —ஆ-ர்.

வருந்துகிறோம்.

சென்னை மாணவர் மன்றத்தின் மூலமாகவும் பிற பல அமைப்புக்கள் மூலமாயும் தமிழினத்திற்கு அருந் தொண்டாற்றிய டாக்டர் திருமதி **தருமாம்பாள்** அவர்கள் 20-5'-59 காலை காலமானதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரின் தமிழ்த் தொண்டும் சமூக ஊழியமும் அவர்கள் பெயரை, பன்னூறாண்டுகளுக்குப் பறைசாற்றும். அவர்கள் மறைவிற்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

வசனத் துளிகள் ★

சிவகெங்கைச் சீமை

★ கவிதைக் கனிகள்

வீரம்

முத்தழகு : எவனடா வருகிறவன்! வாருங்கள் இங்கே! உங்களைப் பெற்றவள் உயிரோடிருந்தால் செய்தி அனுப்பிவிட்டு வாருங்கள்! சொல்லவேண்டியவர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டு வாருங்கள்!

தஞ்சம் என்று வந்தோரைத் தலைகொடுத்தும் காப்பது எங்கள் வழக்கம்! வெஞ்சமரும், வெங்களமும் கொஞ்ச வரும் கிளிகளெனக் கொண்டுலவும் மரபு எங்கள் தென்னாட்டு மரபு!

பெருங்கடலின் அலைபோல் திரண்டுவரும் படைகளிடைப் புலியாகிப் பாய்வாரே இந்நாட்டு மாந்தர்!

யாரிடத்துச் சீறுகிறீர்! எவ்விடத்து நிற்கின்றீர். செங்குருதி வீழ்ந்ததனால் சிவந்ததெங்கள் மண்டலம்! சிவகெங்கை சிவந்த கெங்கையாகட்டும்!

தோலுரித்துக் காட்டுகிறேன். உங்களைத் தூளாக்கிப் போடுகிறேன். தானாபதித்தலையை நீங்கள் பாலாவிலே சொருகி வந்தது போல், உங்கள் வெள்ளைத்தலைகளையெல்லாம் வேலிலே சொருகி நகர்வலம் வருகிறேன்.

யார் வருவது வெல்ஷ் துரை வருகிறாரா? இல்லை, ஊராளத் துடிக்கின்ற உடையணர்தான் வருவாரா?



★

வேண்டுகோள்

மூவரையும் காப்பாற்றி எங்கள் குடும்பத்தை முன்போல் இணைத்து வைக்க வேண்டும் தாயே!......எப்படியாயினும் அவர் என் கணவர்! உங்களை மன்றாடுகிறேன்! அவருக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்!

கண்ணாத்தாள் :

தாலிக்கு வேலியளித்த தார்வேந்தர் தேவியரே! என் வாழ்வுக்கு ஒரு வேலி! மனதுக்கொரு கணவர்! என் உயிருக்கு அவர் உயிர்! தழைத்து வரும் சிவகெங்கைப் பயிரை அவர் அழிக்க முயன்றதை நான் அறிவேன். 'பிழைத்துப் போ!' என்று ஒருமுறை மன்னியுங்கள்! கடல் மழைபோல் பெருகும் உங்கள் கருணை உள்ளம் ஒரு முறைஅவருக்காக இரங்கட்டும். அவரையும் மன்னியுங்கள். அப்படி ஒரு அண்ணனைப் பெற்றதால், செய்த வீரச் செயல்களுக்கெல்லாம் துரோகி என்ற பட்டத்தைப் பெற்ற அவர் தம்பியையும் மன்னியுங்கள்.

பாடல்

"சிவகெங்கைச் சீமை"

★

சிவகெங்கை சீமை—எங்கள்
சிவகெங்கைச் சீமை
எவர்வந்தாலும் எதிர்த்துநிற்கும்
சிவகெங்கைச் சீமை (சிவ)

அன்னைமக்கள் ஒன்றுபட்டு
தன்மைகண்டு மென்மைகொண்டு
அற்புதங்கள் செய்தஎங்கள்
சிவகெங்கைச் சீமை (சிவ)

போர்முகத்தில் ஏறிநின்று
பேர்வளர்த்த பாண்டிநாட்டின்
சீர்வளர்த்து வாழ்வதெங்கள்
சிவகெங்கைச் சீமை (சிவ)

கச்சணிந்த சிற்பமாதர்
காற்சதங்கை போர்முழங்கி
காவியங்கள் செய்ததெங்கள்
சிவகெங்கைச் சீமை (சிவ)

அன்றும்இன்றும் என்றும்எந்த
அன்னியர்க்கும் அடிமைஇன்றி
தன்னையாண்டு தான்வளர்ந்த
சிவகெங்கைச் சீமை (சிவ)

இயற்றியவர் : **கண்ணதாசன்.**

இசையமைத்தோர் :
விஸ்வநாதன்-ராமமூர்த்தி

இசைத்தோர் :
டி. எம். சௌந்தரராஜன்,
சீர்காழி கோவிந்தராஜன்,
ஏ. பி. கோமளா குழுவினர்.

கண்ணீர்

"அவர் செய்த துரோகத்திற்கு என்னைத் தண்டியுங்கள்! சாட்டையால் அடியுங்கள்! தலைவேறு கால் வேறாக்குங்கள்! அவருக்கு உயிர்ப்பிச்சை அளியுங்கள்! முத்தழகரையும் காப்பாற்றுங்கள்."

"போதும் நிறுத்து! கழுகு செய்யும் குற்றத்துக்குப் புறாவைத் தண்டிக்கும் நீதி இன்னும் சிவகெங்கையில் உருவாகவில்லை. அழிக்க வேண்டியதை அழித்தாலொழிய நிலைக்க வேண்டியது நிலைக்காது!"

அவலம்

முத்தழகு : அண்ணி! உனக்குத் திருப்திதானா! மனம் அமைதிகொண்டு விட்டதா! அற்புதமான கட்டம் ஆரம்பமாகிவிட்டது தாயே! பலகாலம் பட்ட பாட்டுக்குப் பலன் கிடைத்துவிட்டது. உன் குடும்பப் பற்றுதல் என் பெயரையே குழிதோண்டிப் புதைத்துவிட்டது. அண்ணனுக்காக உயிர்ப்பிச்சை: கேட்டாயே தம்பியின் தலை உருளட்டும் என்று! அந்தத் தாய்மை என்னைப் பெற்ற தாய்க்குக்கூட வராது தாயே, என்னைப் பெற்ற தாய்க்குக் கூட வராது!

கண்ணாத்தாள் : தம்பி! என்னையா சந்தேகிக்கிறாய்?

முத்த : யாரையும் சந்தேகிக்கவில்லை தாயே. யாரை நம்புவது என்றுதான் இப்போது யோசித்துக்கொண்டிருக்கிறேன். கத்தியும் உறையும் கதை சொன்னபோதும் என் குடும்பத்தை நான் சந்தேகிக்கவில்லை.

புலிநகத்தைக் கண்ட அண்ணி புலியைக் கண்டதுபோல் துடி துடித்த நேரத்திலும் அந்தப் புலி வாழும் குகை என் குடும்பம் என்று நான் கருதியதில்லை.

காரணமில்லாமல் உயிர்ப்பிச்சை கேட்ட நேரத்திலும் கணவனுக்காக அண்ணி தம்பியைப் பலியிடுகிறாள் என்று நான் கனவிலும் கருதியதில்லை.

சம்பவங்களின் கோர்வையையே சந்தேகிக்காத நானா தாயே, இப்போது உன்னைச் சந்தேகிக்கப்போகிறேன்.

கண் : கொதிக்கிறது நெஞ்சம்! கொல்லாதே என்னை!

முத்த : முடியாது கொல்லத்தான் போகிறேன். சதியில் எனக்குப் பங்கில்லை என்பதை இந்தத் தரணிக்குச் சொல்லத்தான் போகிறேன். அதற்குமுன் உன் ஆணையை கேட்கத்தான் வந்திருக்கிறேன். ஆணையிடு!

இல்லையேல் உன் மஞ்சள் குங்கமம் மாலை மாங்கல்யம் நிலைப்பதற்காக, காட்டிக்கொடுத்த துரோகியாகவே நான் சாகிறேன். என்னை நீயே கொன்றுவிடு.

★

அலட்சியம்

சின்னச்சாமி : நகைக்கட்டும். நன்றாக நகைக்கட்டும். நீயும் நகைத்துவிடு.

வலுவுள்ளவர்கள் வாழ்கிறார்கள். வாயுள்ளவர்கள் சிரிக்கிறார்கள். சாவைக் கண்டு சிரிக்கப் பழகு. சஞ்சலம் மறைந்துவிடும். ரத்த ஓட்டத்திலிருந்து பாசத்தை எடுத்துவிடு. இதயம் சுத்தமாகிவிடும்.

மண்டைஓடுகளின் மேலே நடந்து மண்டலத்தை ஆண்டவர்கள் பலர். தன் தம்பியின் தலைமீது நடந்து தரணியை ஆளப்போகிறவன் உன் கணவன்.

பைத்தியக்காரி வரக்கூடாது. வந்துவிட்டது. அழுதாலும் தொழுதாலும் அதில் ஓர் எழுத்தும் மாறாது. வாழத் தெரியாதவன், வரண்டுபோன தத்துவங்களின் பிரதிநிதி, ஜெயிக்கும் கட்சியிலே சேரத் தெரியாதவன், போராடுவோர் பக்கம் சேர்ந்து புத்தியிழந்தவன், சாவதற்கென்றே பிறந்துவிட்ட துர்பாக்கியம் பிடித்த என் சகோதரன். அவன் ஆத்மா சாந்தியடையட்டும்! சாந்தியடையட்டும்.

பெயரில் என்ன இருக்கிறது ..? நூறுபேர் கூடி ஊர்வலம் நடத்தி, வீராதிவீரன் என்று வாழ்த்துப்பாப் பாடினால் துரோகி தியாகியாவான். குழப்பம் புரிந்தவன் முழக்கம் செய்தவனாவான். கொள்ளையடித்தவன் வள்ளலாய் மாறுவான். மந்தை ஆடுகள் மக்கள். வாழ்ந்து காட்டுகிறேன் பார். வருக வருகவென வாழ்த்துரைக்கச் செய்கிறேன் பார்.

கல்லாகிவிட்டது நெஞ்சம். கரைக்கமுடியாது உன்னால்.

இது கதை

தென்பாண்டி நாட்டினிலே, சேதுபதி பூமியிலே,
பொன்பூத்த சீமைஇது! புகழ்பாடும் சீமைஇது!
தெக்கூரும் ஒக்கூரும் சிறுவயலும் பூங்குடியும்
திருப்பத்தூர் நரிக்குடியும் திருமயமும் முக்குளமும்
நரலுகோட் டைநாடும் நாட்டரசன் கோட்டையதும்
சேர்ந்து பெருமைதரும் சிவகெங்கைச் சீமைஇது!
ஆயிரத்து எழுநூற்று எண்பதாம் ஆண்டுமுதல்
அழகுசிவ கெங்கையினை ஆண்டார் மருதிருவர்!
மாமறவர் பெற்றெடுத்த மருதிருவர் ஆட்சியிலே,
கள்ளர் பயமின்றி, கவலையின்றி, மக்களெலாம்
உள்ளம் மகிழ்ச்சியுறும் உயர்வுடனே வாழ்ந்திருந்தார்.
அஞ்சாத கும்பினியார் அஞ்சி நடுநடுங்கி,
அன்புதரும் நண்பர்களாய் அரசர்களைக் கொண்டிருந்தார்.
அதற்குமுன் சிவகெங்கை ஆண்டிருந்த தேவருக்கு
அடுத்துவரும் வாரிசென நினைத்திருந்த உடையணரை
மக்கள் ஒதுக்கிவிட்டு, மருதரசைக் கொண்டதனுல்
உள்ளம் குமுறி இருந்தார், உடையணர்காண்!

அந்நேரம்,

முத்தழகு சேர்வை முடிமன்னர் தளபதியாம்,
சித்தங் குலையாத சீராளன் அன்னவனின்
கூடப் பிறந்தோன் கொடியவன்சின் னச்சாமி
உடையணரைத் தூண்டிவிட்டு ஊரைக் கெடுக்கவைத்தான்.
கொள்ளை கொலைபுரிந்தான்; குடும்பங் களைப்பிரித்தான்;
அவன்தான் கயவனென அறியாமல் நடந்துவந்தான்.
கயவன் தனைப்பிடிக்கக் கச்சைகட்டி முத்தழகு
திரிந்தான்காண் ஊரெங்கும் தேடினுன் என்ருலும்
அண்ணன்தான் திருடனென அறியவில்லை முத்தழகு!

அந்நாளில்,

ஆயிரத்து எழுநூற்றித் தொண்ணூற்றி ஒன்பதிலே
பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தைக் கும்பினியார்
கைப்பற்றி அழித்துவிட்டுக் கட்டபொம்மு நாயகரைக்
கயித்தாறில் தூக்கிலிட்டார் காளைஊ மைத்துரையை
பாளையங் கோட்டையிலே பாழ்சிறையில் வைத்துவிட்டார்.
ஒன்னரைஆண் டுக்காலம் ஓடி மறைந்தபின்னர்
ஊமைத் துரைசிறையை உடைத்துக் கிளம்பிவிட்டான்.
சிவகெங்கை நகர்நோக்கி, சிட்டாகப் பறந்துவந்தான்.

அங்கே,

அண்ணன் முகமூடி அறியாத முத்தழகு
கத்தியினைக் காட்டியதும், அண்ணி கலங்கியதும்
புலிநகத்தைக் கண்டஅண்ணி புலிபோல் பதறியதும்
கள்ளமிலா நினைவுடனே கயவனும் அண்ணனையும்
வீரமன்னர் தம்மிடத்தே வேலைக்குச் சேர்த்ததுவும்,

அந்த,

குடிகேடன் அரசரையே கொல்ல முயன்றதுவும்,
முத்தழகே துரோகியென முடிமன்னர் கூறியதும்
ஊமைத் துரைஇருக்கும் உளவறிந்த கும்பினியார்
கைதுசெய்ய வந்ததுவும், கால்தெறிக்க ஓடியதும்,
காளையார் கோவிலிலே கடும்போர் நடந்ததுவும்,
உருமாறி முத்தழகு உரிமைக்கே போராடி
மன்னவரைக் காத்ததுவும் மானம் வளர்த்ததுவும்
கும்பினியார் கூட்டம் ராணிகளைக் கைதுசெய்து
திருப்பத்தூர் நகரினிலே சிறையிலிட்டு மூடியதும்
பால்மணக்கும் செவ்வாயான் பாலகனும் துரைசாமி
கும்பினியின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி
மாண்டு மடிந்ததுவும், மருதரசர் கதறியதும்
கண்ணுத்தாள் உத்தமி,தான் கணவனையும் கொன்றதுவும்
ஆதிக்க வெறிபிடித்த ஆங்கிலர்கள் பீரங்கி
கோட்டையினைச் சாய்த்ததுவும். கொடிபோட்டு நின்றதுவும்
தூக்கு மரம்நாட்டித் தொங்கவிட வந்ததுவும்
கண்டால் மனம்பதைக்கும். கண்ணீர் பெருக்கெடுக்கும்;
வெண்திரையில் கண்டு விளங்கிடுவீர் இப்பொழுதே!
செந்தமிழர் வாழ்க! திராவிடர்தம் புகழ்வாழ்க!

கண்ணதாசன்

சிவகெங்கைச் சீமை

- திரைக் கதை -

வாழ்வும் வளமும் தழைக்கும் மறவர் நாடு! தென்பாண்டி மண்டலத்தின் ஒளிவிளக்கு— சிவகெங்கைச் சீமை!

பத்தினிப் பெண்மையைக் காத்து, பாவலர் வறுமையைத் தீர்த்து, ஜெயக்கொடி பறக்கவிட்ட சுத்தவீரர்கள் **மருது பாண்டியர்** ஆண்டு வந்தனர் அச்சிவகெங்கைச் சீமையை! அன்னார் பார்வையில் பயப்படுவர் பகைவர்; வசப்படுவர் பாவையர்.



நாடு அன்னார் புகழையும் திறனையும் "வாழ்க! வாழ்க!" எனப் பாடியது. தோன்ருத் தோன்றித் துறை பல முடிக்கும் ஆன்ற தமிழ்ச் சான்ருேரும், தொட்டதொரு போரிலெல்லாம் வெற்றியே முடிவாக்கும் சிவகெங்கை மறவர்களும் அச்சீமையின் புகழை, நாவாலும் வாளாலும் பாடினர்.

ஆற்காட்டு நவாபின் படையைச் சிவகெங்கை மறவர் அணி நொறுக்கி வாகைசூடிய நான்காண்டுகளுக்குப் பின் இந்நிகழ்ச்சிகள் நடக்கின்றன. வேலு நாச்சியார் மறைவிற்குப்பின் வேங்கை நிகர் **சின்னமருதுவும்** வேழம் போன்ற **பெரிய மருதுவும்** அரசோச்சி வந்தனர்.

"மருதரசர்!"

"வாழ்க!"

"மகரக்கொடி"

"வாழ்க!"

வாழ்த்தொலிகள் இவையே எங்கும் நிலவின.

மறமே உருவான மருதிருவரும் **தளபதி முத்தழகும்** வாளேந்தி நின்றனர்; அமைதி நடனமாடியது.

கனியொழுகும் சுவைத் தமிழின் செல்வர்களும் மதகுபட்டிப் புலவரும், சீனிச் சர்க்கரைப் புலவரும், சவ்வாதுப் புலவரும் பிறரும் ஏடேந்தினர்; நாடே ஒளி வீசியது.

உளம் கவரும் இந்த உல்லாச நிலையிலே, தன்னுட்சியும் செங்கோலும் தழைத்திருந்த அந்த மருதரசரின் மன்றம் கூடிய ஒரு நாளில்...

விறலியர் பலர் ஆடிக் காட்டினர், அழகுத் தமிழும் மகரயாழ்க் குரலும் பேச.

தோலா நாவின் மேலோரான தமிழ்ப் புலவோர் வாழ்த்தினர்.

அடுத்து வந்தனன், ஆற்றல் மிக்க மன்னருக்கு வணக்கம் செலுத்தி நூற்று அறுபது வயதுக் கிழவன் ஒருவன்.

வயது ஆகியும் வலிமை குன்ரு அம்மறவன் உடற்கட்டின் அற்புதங்கள் பல செய்து காட்ட அயர்ந்தனர் சுற்றி இருந்தோர்; வியந்தனர் மருதரசர்.

ஆணவ மொழி பேசிய அக்கிழவனின் வலிவைச் சோதிக்க, மருதரசர், ஒரு நாணயத்தை வீசினர். அதனைத் தன் கையில் ஏந்திக்கொண்ட அவன் இரு விரல்களுக்கூடே அதனை வைத்து, பெருவிரலால் வளைத்து இரு துண்டாக்கினன்.

அவன் செயல்களைக் கவனித்த சின்னமருது. கிழவனின் தாடியைப் பற்றி இழுத்து மாற்றுருவைக் கலைத்தான். தடியும் தாடியும் கொண்டு அற்புதங்கள் பல செய்த அக்கிழவன் வேறு யாருமில்லை; தளபதி **முத்தழகு**தான்.

அவை மகிழ்ந்து வாழ்த்தியது அத்திறல் மறவனை. தட்டிலா மகிழ்ச்சியில் திளைத்த அவன், அந்நன்னுளில் தன் தடந்தோள் தட்டிச் சொன்னுன்: "சிவகெங்கையின் வாசலுக்குப் போர்க்கோலம் கொண்டு வருவோர் எவராஞலும், அவரைச் சந்து சந்தாக்கி, சதைகளைக் கூருக்கி, எங்கள் தாயகத்தின் எதிர்காலத்தை அதிலே பயிர் செய்வோம்!"

மன்னரின் ஆட்சியுடனும், மக்கள் வாழ்த்துடனும் அவை கலைகிறது.

மருதரசர் ஆட்சியைக் காப்பேன் என்று முத்தழகன் ஆணையிடுகிற அதே நேரத்தில், மறுபுறத்தில் **சின்னச்சாமி** நப்பாசைக்குத் தண்ணீர் வார்ப்பதை யாரும் அறியார். "மருதரசர்கள் சேர்வைகாரர்கள்! எனவே முத்துவடுகநாதத் தேவர் ஆண்ட மண்ணை ஆளுதற்கு அன்னுர்க்கு உரிமை இல்லை!" என்ற காரணம் காட்டி, **படமாத்தூர் கௌரிவல்லப உடையணத்தேவர்**, சிவகெங்கை ஆட்சியைக் கைப்பற்ற முனைகிருர். ஆசையால் அவர் விரித்த வலையில், துரோகி சின்னச்சாமியும் சேர்கிருன்.

துரோகி சின்னச்சாமி, கொண்ட வெறிக்காக, குடும்பப்பற்றையும் இழந்தவன்; உடையணர் ஊராண்டால் உயரும் தன் செல்வாக்கு என்று



கனவு கண்டவன்; மானம் இழந்த அடிமை வாழ்வாலாகிலும் தன் நிலையை வளப்படுத்திக்கொள்ளத் துடித்த தீயோன்; நல்லவீட்டில் உலவும் தேள், முத்தழகின் அண்ணன்! ஆனல் முத்தழகுகூட அறியான் தன் அண்ணன் ஒரு வஞ்சமனக் கள்ளன் என்பதை...

அரசரின் வாழ்த்துக்களைப் பெற்ற அடலேறு முத்தழகு தன் குதிரையேறி, மனந்திறந்து இசை முழங்கிக்கொண்டு வருகிருன். நாடு முழுவதும் நிலவிய அமைதியும், போர் மறவர் அருந்திறனும் அவன் இசை முழக்கமாய் மாறுகின்றன.

"வீரர்கள் வாழும் திராவிட நாட்டை
வென்றவர் கிடையாது!
வேலும் வாளும் தாங்கிய மறவர்
வீழ்ந்ததும் கிடையாது!"

என்ற இசை அலைகள் பரவுகின்றன. வெண் புரவி ஓட ஓட, வெண்கல நாதம் மேலும் முழங்குகிறது.

"மன்றம் மலரும் முரசொலி கேட்கும்
வாழ்ந்திடும் நம்நாடு—இளந்
தென்றல் தவழும் தீந்தமிழ் பேசும்
திராவிடத் திருநாடு"

என்று நாட்டு வளம் பாடிக்கொண்டே வீட்டை வந்தடைந்துவிட்டான்.

தாய்ற்ற அவனுக்குத் தாயாய் விளங்கியவள், அவனது அண்ணன் சின்னச்சாமியின் மனைவி, **கண்ணுத்தாள்**தான். குடும்பப் பொறுப்பும், அன்புப் பாங்கும், பெரும் பாசமும் கொண்ட குடும்ப விளக்கு அவள். கொழுந்தனின் மகிழ்ச்சி துள்ளும் முகத்தைக் கண்ட அவள் ராஜ சபையில் நடந்தவற்றை அறிந்து பெருமைப்படுகிருள். நேரங் கழித்து வந்த சின்னச்சாமியோடு பேசிக்கொண்டே முத்தழகு சாப்பிடுகிருன்.

மருதரசர், அங்கும் இங்குமாய், தன் ஆட்சியின் அமைதிக் காலத்தில் செய்தவை, பல.. காளையார் கோவிலுக்கு மிகப் பெரிய தேரொன்று செய்து வைக்க நினைத்த பெரியமருது, **குப்பமுத்து ஆசாரி**யிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கிருர். தேர் செய்ய மருத மரங்கள் வேண்டுமெனவும், அவை திருப்பூவனத்தின் ஊருணிக்கரையில் உள்ளதாகவும், அவற்றைக் கொண்டு வந்து தரும்படியும் கூறினன், குப்பமுத்து. மருதரசர் கட்டளைப்படி. அவரது மெய்க்காப்பாளன் **கறுத்தான்** சில வீரர்களுடன் அந்த மரம் உள்ள இடம் சென்று அவற்றை வெட்ட முனைந்தான். அரசாங்கத்து ஏவலர்கள் அவர்கள். அவர்கள் நினைத்தால் செய்யமுடியாதது ஏதுமில்லை. அவர்கள் காற்றையும் மடக்கக்கூடும்; ஆற்றையும் திருப்பக்கூடும்! அந்த ஆற்றல் மிக்கோர் முன் ஒரு கிழவரும் குமரியும் "மரங்களை வெட்டாதீர்!" என்று தடுத்தனர். காரணம் அறியாப் படை மறவர் திகைத்தனர். மருதரசர் பெயர் கேட்டால் மலையும் நடுங்கும் நாளில் "மரங்களை வெட்டாதீர்!" எனத் தடுப்போர் யார்? மன்னரின் கட்டளைக்கு அவர் மண்ணுக்குள்ளேயே மறுப்பா? சீமையை ஆளும் பார்த்திபனின் ஏவலுக்கு, இந்தச் சிற்றூர் வாசிகளின் மறுப்பா? சினம் கொப்பளிக்கிறது; செய்தி தெரிகிறது, சிவகெங்கையிலிருந்த, மன்னர்க்கு...

அரசாங்கத்து ஆணையை மறுத்தவர்முன் பெரியமருதுவும் சின்ன மருதுவும் நின்றனர். கொற்றவர் கட்டளையை மறுத்ததேன் என முதியவர் விளக்கிஞர்.

"மன்னர் மன்ன! தங்களையும் தங்கள் இளவலையும் இம்மருத மரங்களில் கண்டு உயிராய் எண்ணி வளர்க்கிறேன். நான் உயிராய்க் கருதும் மரங்களையா வெட்டச் சொல்கின்றீர்! வேந்தர் வேந்தே! வேறு மரங்களை வெட்டலாமே!"

விளக்கமும் விஞவும் பெரியவர் இப்படிக் கிளப்பியதும் மருதரசர் சிந்தை மகிழ்ந்தார்; தன்மீது முதியவரும் அவர் மகள் **சிட்டு**வும் அன்புக்கு நன்றி செலுத்தித் தம்முடன் இட்டுச் சென்ருர்.

நரிக்குடி (முக்குளம்) மருதரசர் பிறந்த ஊராகும்; அவ்வூர்ச் சத்திரம் இன்றும் மருதரசரின் புகழ் கூறி நிற்பது ஆகும். நெடும்பயணம் செல்லும் மக்கள் தங்கி இளைப்பாறவும், அறுசுவை உண்டிபெறவும் ஆன ஏற்பாடுகளைச் செய்திருந்தார் மருதரசர். அமைதி தவழ ஆட்சி நடந்துவந்த அக்காலத்தில், கோசிக்குண்டுவைச் சேர்ந்த ஒரு நாயகர் இளைஞனும் அவன் மனைவியும் வேலுநாச்சியின் படைப்பு விழா காணப் புறப்பட்டனர். வழியில்

பொழுது சாய்ந்துவிடவே, இரவைக் கழித்துச்செல்லச் சத்திரத்தில் தங்கினர். அழகும் பருவமும் கொழிக்கும் அந்த இளம்பெண்ணைக் கண்ட கழுகு விழிக்காரர்கள் சிலர் அவள் கணவனைக் கொன்றுவிட்டு, அவளை அபகரிக்க

முனைந்தனர். அழுது புலம்பிய அவள் குரலைக் கேட்டுவந்த முத்தப்பன் முதலியோர் உடன் உதவுகின்றனர். சேதியறிந்த மருதரசர்கள் அந்த இடத்தை அடைந்தனர். முத்தழகும் உடன் வந்தான். மருதரசர் எவ்வளவோ தேறுதல் சொல்லியும் மஞ்சளும் குங்குமம் இழந்த அவள் மனது ஒப்பவில்லை. முத்தழகு குற்றவாளிகளைப் பிடித்துத் தந்து, நீதிக்கு அரண் செய்தான்...பத்தினி அவளுக்கு, வழிபாடு செய்தார் மருதரசர்...

இப்படி, பத்தினிப் பெண்டிர் பெருமை காத்தும், மக்கள் அன்பைப் பெற்றும் ஓங்கு புகழுடன் மருதரசர் ஆண்டு வந்தார்...

முத்தழகுவுக்கோ, நரிக்குடியில் கொலையை நடத்தியவனைக் கண்டுபிடிக்கவேண்டிய பெரும் பொறுப்பு...

அவன் யார் என்று கண்டு பிடிக்க முடியாமல் வீடு வந்து சேர்கிறான். அண்ணி கண்ணுத்தாள் அவன் கையிலிருக்கும் கத்தியைக் கண்டு திகைக்கிறாள்.

நடந்ததை முத்தழகு மூலம் அறிந்தவளாதலால், "கத்தியில் விலாசம் இருக்கிறதா?" என்று கேட்கிறாள். "இருந்திருந்தால் ஆராய்ச்சிக்கு இடமே இல்லையே!" என்ற முத்தழகு, சுவரில் தொங்கிக்கொண்டிருந்த குத்து வாள் உறை ஒன்றைக் கண்டு திடுக்கிடுகிறான். அந்த உறை கொலையாளியின் குத்து வாளுக்குப் பொருந்தி இருக்கிறது.

"அண்ணி! அண்ணன் எங்கே? இந்த உறையில் இருந்த கத்தி எங்கே?"

கண்ணுத்தாள் நடுநடுங்கினாள்.

"அண்ணன் நாலுகோட்டை போயிருக்கிறார். அந்தக் கத்தியை... போன வருஷம் பாரிவேட்டைக்குச் சென்றபோது, பிரான்மலைக் காட்டில் தொலைத்துவிட்டார்."

கண்ணுத்தாள் மழுப்பினாள். அவன் ஓரளவு சந்தேகம் நீங்கியபடி, "எப்படியும் கண்டு பிடிப்பேன் நானே!" என்று செல்கிறான்

நிகழ்ச்சிகளை ஒன்றுக்கொன்று பொருத்திப் பார்த்த கண்ணுத்தாள் அலமந்தாள். அண்ணனும் தம்பியும் மோதிக்கொள்ளும் காலம் வந்ததே என வாடுகிறாள்...

சின்னச்சாமி கொலையும் கொள்ளையுமே தொழிலாய்த் திரியும், நோக்கங்களென்ன?

ஒன்று: காவல் இல்லாத ஆட்சி மருதரசர் ஆட்சி என மக்கள் காறி உமிழ வேண்டும்.

இரண்டு: அதன் மூலம் மருது பாண்டியரை எதிர்ப்பவர்கள் அதிகம் என ஆங்கிலேயர் அறிய வேண்டும். ஆங்கிலேயர் அப்படி அறிவதன் மூலம் மருதரசரை வீழ்த்தத் துணை தருவர். பின், கௌரிவல்லப உடையணர் ஆட்சி, சிவகெங்கையில் தழைக்கும்!

நப்பாசைமிக்க இந்த நயவஞ்சக நரிகள் வகுத்த திட்டத்தின் எதிரொலிதான் நாடெங்கும் கொலை, கொள்ளை முதலியவற்றின் தொடக்கம். இவற்றின் நோக்கத்தை அறியாவிட்டாலும் மருதரசர் உடனுக்குடன் அவற்றைக் களைந்து வந்தார்.

வழி தவறுனாலும் பழி தம்மீது ஏற்படாது என்று கூறினான் சின்னச்சாமி.

☆

சிவகெங்கை வந்து சேர்ந்த சிட்டுப்பெண்மீது, முத்தழகனுக்கு ஒரு கண்! அதாவது காதல் கண்! அவளும் அவனை அந்தக் கண்ணோடு பார்த்தாள். ஒரு நாள் அவள் இருக்கும் பொய்கைக்கரைப் பக்கம் முத்தழகன் குதிரையேறி வந்தான் அவளுடன் அவள் தோழிகளும் இருந்தனர். அவளையும் அவனையும் கண்டவுடன் தோழிகள் சுற்றி நின்று கும்மாளமடிக்கத் தொடங்கிவிட்டனர்.

'கொட்டுமேளம் கொட்டுங்கடி
கும்மிகொட்டிப் பாடுங்கடி
கோவேறு கழுதைமேலே
மச்சான் வந்தாண்டி''

எனக் கும்மியடித்துப் பாடி அவனைக் கிண்டல் செய்து தண்ணீரில் தள்ளினர்.

☆

சின்னச்சாமியின் கோர விளையாட்டுக்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்கின்றன.

பழைமையும் ஓரளவு ஒளியும் குடிகொண்டிருந்த சிவகெங்கை எல்லை மண்டபத்தில் ஒரு புலவரும் அவர் மனைவியும் அங்கே தங்கி இரவு உணவை முடிக்கக் கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்க்கின்றனர். எடுத்த சோற்றை ஒரு கவளம் விழுங்கும் முன்னர், சுற்றிலும் திருடர் கூட்டம் சூழ்கிறது. மனைவி மருள்கிறாள்; புலவர் திடுக்கிடுகிறார். இருக்கும் பொருளனைத்தையும் கொள்ளைக் கூட்டம் பறிக்கிறது. இராமநாதபுரம் மன்னரிடம் அந்த ஏழைப் புலவன் பெற்று வந்த பரிசையும் இழந்தான். கொடுமை அத்தோடு நிற்கவில்லை. அவன் மனைவியின் தாலியையும் பற்றி இழுத்துக் கவர்ந்தது.

கணவன் அருகிருக்கையிலேயே தாலி அறுக்கப்பட்டுவிட்டது. கவிழ்ந்த தலையும் வெடித்த நெஞ்சுமாய் அலமந்தாள் அவள். சீரோங்கி வேரூன்றி நிற்கும் சிவகெங்கையிலா இந்த அநியாயம்?—சிந்தை அணுக்கள் ஒவ்வொன்றும் நொந்து வெடிக்க அந்த வினாக்களைக் கேட்டான் புலவன்.

"மருதுபாண்டியா!... மருதுபாண்டியா! அக்கிரமம்! அநியாயம்! கொள்ளை! கொள்ளை! என்று நெஞ்சு வெடிக்கக் கதறித் தன் அரண்மனைக்கு இரவில் ஓடி வந்த புலவனை என்னென்று கேட்டார், மருதுபாண்டியர்."

"மருவிருக்கும் கூந்தல் மனையாள்
கணவன் அருகிருக்கத் தாலிஅறுமா—இரவுனக்குச்
செங்கோல் இலையாஇத் தேசமெங்கும்
கள்வருக்கு பங்கோ மருதுபூபா!"

என்று தன் அவலத்தைச் சொற்படம் வரைந்து காட்டினான். அராஜகத்தின் தன்மையை அறிந்த மருதுபாண்டியர் மனம் நொந்தார்.

"திருட வேண்டிய அவசியமே இல்லாத வாழ்க்கை மருதுபாண்டியர் வாழ்க்கை! கயவர் சிலர் ஏதோ காரணமாக இந்தக் குற்றம் புரிகிறார்கள்!" என்றுணர்ந்த மருதரசர், புலவரை அமைதிப்படுத்தினார். புதியதோர் தாலிக்கும் புலவரின் எதிர்காலத்திற்கும் ஆகும்படி பொன் அணிகள் பல தந்தார் மருதரசர்; கள்வர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவும் உறுதி கூறினார். புலவர் மன்னனை வாழ்த்தி அகன்றார்.

அரிவையரின் தாலிக்கு வேலி தந்தனுப்பியபின் பெரியமருதுவும் சின்ன மருதுவும் முத்தழகும் கூடிக் கலந்தனர். கற்பழித்தல், கொலை, கொள்ளை, களவு முதலியவற்றின் மூலவனைக் கண்டுபிடித்து அமைதியை நாட்டல் முத்தழகின் கடன் என மன்னர் ஆணையிடுகின்றார்.

"கூண்டோடு அழிப்பேன் பகைக் குலத்தை!" என்கிறான் முத்தழகு...

☆

"கூண்டோடு அழிப்பதற்குக் கொடுத்த பரிசுதான் இந்தப் புலி நகம்!"

"யார் கொடுத்தது?"

"மன்னவர்"

"மருதரசரா?"

"இல்லை! படமாத்தூர் கௌரிவல்லப உடையணத்தேவர்!"

கணவன் சின்னச்சாமியின் பதில் கேட்ட கண்ணுத்தாள் திடுக்கிடுகிறாள். தம்பியோ மருதரசரின் படைத்தலைவன்; அண்ணனோ உடையணரின் கைக்கூலி. இருவரும் எதிர் எதிர் அணிகளில். முத்தழகுக்குத் தெரிந்தால்... "தெரிந்தால் இருவரில் ஒருவர் பலியாக நேரிடும்!" என்கிறான் சின்னச்சாமி. பேதை கண்ணுத்தாள் மதி நொந்து, கணவனை அத்தீச் செயலுக்குப் போக வேண்டாம் என்று கூறினாள். அண்ணனும் தம்பியும் தம்தம் தொழிலை விட்டுவிட்டுத் தன்னோடு வந்தால், நாட்டரசன்கோட்டையிலிருக்கும் நிலபுலங்களைக் கவனித்துக்கொண்டு அமைதியாய் இருக்கலாம் என்று கூறி வேண்டுகிறாள்.

"பைத்யக்காரி. ஒளி மிகுந்த எதிர்காலத்தை உருக்குலைக்கப் பார்க்கிறாய்!" என்று எள்ளி நகையாடி விட்டுச் செல்கிறான் சின்னச்சாமி. சே! அவன் நல்ல குடியில் பிறந்த நச்சுக்கனி!

நச்சுக் கனியின் அழிவு வேலை ஒரு புறம் நடக்க, வெள்ளைப்படையின் வெறிச் செயல்கள் மறுபுறம் தலைவிரித்தாடுகின்றன. சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்த மன்னரிடம் ரகுநாதத்தேவர் கூறினார். "ஒரு வருந்தத்தக்க செய்தி. கட்டபொம்ம நாயக்கரை கைது செய்து, பாதையில் உள்ள புளியமரத்தில் தூக்கிலே போட்டுவிட்டார்களாம்......ஊமைத்துரையையும் கைது செய்துவிட்டார்களாம். அவரது குழந்தைகளையும் பலவந்தமாகப் பறித்துச் சென்று படாதபாடு படுத்தி திருச்சி சிறையில் அடைத்துவிட்டார்களாம்!"

நடந்ததை எண்ணி நொந்துகொண்டிருக்கும் வேளையில் அங்கு வந்த சின்னமருது "இதே கதி நமக்கும் ஏற்படாது என்பதற்கு என்ன உறுதி?" என்று கேட்டுக் கொதிக்கிறார். பாளையங்கோட்டைச் சிறையிலே வாடுகிறான் ஊமைத்துரை என்றறிந்து மனம் நோகுகிறார்.

பாளையங்கோட்டையில் ஊமைத்துரை சிந்தனையுடன் முன்னும் பின்னும் உலாவிக்கொண்டிருந்தான். அவன் அன்று அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படைக்கு அதிபதி. இன்றோ, தணலில் பட்டபுழு: புனலில்விழுந்த முடவன்; சிறகிழந்த புறா!

நெஞ்சம் வெந்தழியும் கொடுமைக்காளான அவனோடு சிறையில் கிடந்த ஒரு முதியவர் மூட்டுகிறார் உணர்ச்சித் தீயை!

சிவகெங்கைச் சீமை உதவியைப் பெற்றாலும் ஊமைத்துரை விடுதலை பெற்றுச் செல்தலே பாஞ்சையின் எதிர்காலத்திற்கு உகந்தது என அவர் விளக்குகின்றார். ஊமைத்துரையும் அதை ஒத்துக்கொண்டு, ஏற்கனவே வீரையா என்பவனைச் சிவகெங்கை மன்னருக்குத் தூதனுப்பி இருக்கும் விவரத்தைத் தெரிவிக்கிறார்.

உதவி கேட்டுப் போன இடத்திலோ பெரியமருதரசர் மறுத்து நிற்கிறார். 'வம்பை வீணுக விலைக்கு வாங்குவானேன்!" என்று யோசிப்பதுபோல் இருக்கிறது அவர் பேச்சு. உதவி கேட்டு வந்த தூதன் வீரையா ஏமாற்ற மடைகிறான். சின்னமருது அவனைத் தேற்றி, அண்ணன் மனதை எப்படியும் மாற்றி உதவி பெற்றுத் தருவதாகச் சொல்கிறார். அந்த ஒரே நம்பிக்கையில் வீரையா விடைபெறுகிறான்...

குளத்தில் தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்தாள் சிட்டு. பருவ நிலாக்கள் பவனிவரும் காட்சியைப்போல் அவர்கள் முகத் தாமரைகள் உலா வந்தன. கன்னியர் இத்துணை பேர் இருந்தால் காண்கின்ற கண்கள் என்னவாகும்? அதிலும் கழுகுக் கண்கள் என்னவாகும்? அத்தகைய கழுகு விழிகள் படைத்த முகமூடி ஒருவன், அப்பெண்டிரிடை குதித்தான் சிட்டுவைக் குறிவைத்துப் பாய்ந்தான். சிட்டு அலறினாள்; பெண்டிர்கூட்டம் சிதறியது. அப்போது, எதிர்பாரா வகையில் அங்கே வந்த முத்தழகு, முகமூடியைத் தாக்குகிறான். குருதிகொட்டும் போர் இருவருக்கும் நடக்கிறது. உடும்புப்பிடியாக முத்தழகு பிடித்தும், அவன் நழுவி ஓடிப்போய் விட்டான். அவன் நெஞ்சில் கிடந்த புலிநகம் மட்டும் முத்தழகுவின் கையில் சிக்குகிறது.

"பேடி! கோழை! ஓடு! என்றேனும் ஒருநாள் உன் தலை என் வளரிக்கப்புக்குப் பலியாகும்!" என்று கூறிவிட்டு, சிட்டுவிடம் வந்து ஆறுதல் கூறுகிறான்.

'காயம் ஏதும் பட்டுவிட்டதா" என்றாள் சிட்டு.

"உன் கண் பட்ட காயம் தவிர வேறு ஏதுமில்லை!" என்று குறும்பு செய்கிறான் முத்தழகு. பின்னர் இருவரும் பிரிகின்றனர்.

வீடுவந்த முத்தழகுவைக் கண்ட கண்ணுத்தாள் திடுக்கிடுகிறாள். உடலெங்கும் காயம், முத்தழகுவுக்கு. காரணம் கேட்டாள், கலங்கிப்போன கண்ணுத்தாள்

"கள்வன் ஒருவன் சிட்டுவைக் கையைப்பிடித்து இழுத்தான். அவனைத் தாக்குதாக்கென்று தாக்கினேன். கைவேலால் அவன் உடம்பைக் கிழித்தேன். குத்திட்டியால் என்னைக் காயப்படுத்திவிட்டான் அதுதான் இதெல்லாம்!

முகத்தைக் காட்டிப் போர் செய்யப் பயந்த கோழை முகமூடி அணிந்திருந்தான். கும்பினியின் நாணயங்களை வேறு மடியிலே கட்டிக்கொண்டிருந்தான், கோழை!" என்று நடந்ததை மொழிகிறான் முத்தழகன்.

தனக்கு அவனை யாரென்று தெரியாவிடினும், அந்த அனாமதேயத்தின் கழுத்திலிருந்த புலிநகத்தைக் கொண்டுவந்திருப்பதாகச் சொன்ன அவன், புலிநகத்தைக் காட்டினான். அதைக் கண்ட கண்ணுத்தாள். அலைகடல் துரும்பாய் அலமந்து வாடினாள். நெஞ்சத்துக் குமுறலை முகம் காட்டி விட்டது. "அவனுக்கு என்ன நேர்ந்தது?" என்று அவள் வாயும் கேட்டு விட்டது அண்ணிக்கு ஏன் அவன்மேல் அவ்வளவு அக்கறை? காமுகன் எவனோ தாக்குண்டான் என்றால், இவள் கண்கள் ஏன் கலங்கித் தவிக்கின்றன?

மாண்ட தன் தந்தை நினைவு, கொல்லும் வரிப்புலியின் நகத்தைக் கண்டதும் வந்துவிட்டதாகச் சொல்லி மழுப்புகிறாள் அண்ணி. கொழுந்தனும் நம்புகிறான்.

புலிநகத்தில் 'உ. தே." என்ற விலாசம் இருக்கிறது. ஆனால் அதன் விளக்கம் அவன் அறியான்.

காலம் பல நிகழ்ச்சிகளை உருட்டிச் சொல்கிறது. காதலும் கடமையும் முத்தழகுவின் இரு விழிகளாகிவிட்டன. அவன் அரசர்கடமையிலும் சிட்டுவின் காதலிலும் ஒன்றுக்கொன்று இடையூறுகாமல் கழித்து வந்தான்.

கள்வர் பலர்-வஞ்சமனத் துரோகிகள் பலப்பலர் அவன் மூளைக்கும் வேலுக்கும் வேலை கொடுத்துக் கொண்டே இருந்தனர். மருதரசர் ஆட்சியினைக் காக்கும் கடமையில் அணுவளவும் தவறாது-பசி நோக்காது-கண் துஞ்சாது-மெய்வருத்தம் பாராது அலைந்தான். அந்த இன்னல்களுக்கிடையும் அவனுக்கு மகிழ்வையூட்டியது ஒன்றே ஒன்றுதான். சுட்டும் சுடர்விழியால் சூரிய சந்திரரையும் தோற்கடிக்கும் ஒளிமுகச் சுந்தரி சிட்டுவின் காதல்தான் அது. பட்டுமேனியும், பவளச் செவ்வாயும் பருவம் பொழியும் பிற நலன்களும் அவளைப் பேசும் பொற்சித்திரம் ஆக்கின; பாடும் குயில் ஆக்கின; அந்தத் திரட்சியில் முத்தழகு சுழன்றான்!

ஆசை அத்தான் வருகையால் அளகம் குலையக் குலைய ஆடி நிற்பாள் நேரிழையாள். அவனைக் கண்டுவிட்டால் அவளுக்கும் ஒன்றும் ஓடாது; அவனுக்கும் அவளுக்கும் இடையே பார்வைதான் மோதும்; தூது செல்லும்; காதல் சொல்லும்.

சிந்தையும் மனமும் இப்படிச் சொக்கித் திளைக்கும் கனவில் மூழ்கினர். அவளும் அவனும் தாம் கண்ட கனவுகளைச் சொல்லிச் சொல்லி உரையாடினர்; பாட்டுப் பாடினர்.

அவன் :

கனவுகண்டேன் நான் கனவுகண்டேன் நம்
காதல்கனிந்துவரக் கனவுகண்டேன்.
(கனவு)

அவள் :

மேளம் முழங்கிவரக் கனவுகண்டேன்-அங்கே
விருந்துமணம்கமழக் கனவுகண்டேன்.

அவன் :

வாழைமரங்கள் வைக்கக் கனவுகண்டேன்-பெண்கள்
வாழ்த்துக்கள் பாடிவரக் கனவுகண்டேன்.
(கனவு)

அவள் :

பளிங்கு மணவறைக்கு நடந்துவந்தேன் இரு
பாவையர் துணையோடு தவழ்ந்துவந்தேன்.

அவன் :

மனதில் மகிழ்ச்சி பொங்க நானிருந்தேன்-கையில்
மாலையும் குங்குமமும் வைத்திருந்தேன்.
(கனவு)

அவள் :

காலம் மலர்ந்ததென்று களித்திருந்தேன்-மாலை
கழுத்தில் விழுந்தவுடன் சிரித்திருந்தேன்!

அவன் :

ஞாலம் நமக்குள் என்று நலைநிமிர்ந்தேன்-பின்!!
நடந்தது கனவாகக் கண்விழித்தேன்.
(கனவு)

இந்தக் காதல் கனவின் விமர்சனத்திற்குமுன் அவன் அவளைப் பெண் கேட்க வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுவதைக் கூறியதும் தான் அவ்வளவு மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சிக் கனவுலகில் திளைத்த இருவரும் பொழுது ஏன் அதற்குள் புலர்கிறது என்று வருந்தினர்.

அப்போது யாரோ முத்தழகுவை "ஐயா" என்றழைப்பதைக் கேட்ட சிட்டு ஓடுகிறாள். முத்தழகு, அழைத்தவரிடம் வந்து "என்ன வேண்டும்?" என்று கேட்கிறான். எதிரே தளர்ச்சியுடன் நின்ற மனிதன் "மருதுபாண்டியரைப் பார்க்க வேண்டும்!" என்று உதவி கோருகிறான். முத்தழகு நிலைமையின் அவசரத்தை உணர்ந்தோ உணராமலோ, "அப்படியா? வாருங்கள். வழிப்போக்கர்களுக்கு உதவி செய்வது என்னுடைய முதல் கடமை. வாருங்கள்!" என்று அழைத்துச் சென்று சின்னமருதரசரிடம் விடுக்கிறான். வந்த மனிதனைக் கண்டதும் 'ஆ! ஊமைத்துரையா? வருக! வருக!" என்று அழைத்து இருக்கச் செய்கிறார். முத்தழகு தான் அழைத்து வந்த மனிதன் ஊமைத்துரை என்றறிந்ததும் திடுக்கிடுகிறான். அவனை அமைதிப்படுத்திப் போகச் செய்த சின்னமருது ஊமைத்துரையுடன் தன் அந்தப்புரம் வந்து சேர்கிறார். ஊமைத்துரையை அமைதிப்படுத்தி உண்டி அருந்தச் செய்து "அண்ணன் சிறுவயல் அரண்மனைக்குச் சென்றிருக்கிறார். எப்படியும் அவர் வந்ததும் சம்மதிக்க வைக்கிறேன்!" என்கிறார்.

அவன் "எப்படியும் மருதரசர் உதவியால்தான், இனி வாழ்வு" என்ற நிலையில் உள்ளவன். வாட்டிய சிறைக்கூடத்துக்குள் வதங்கிக் கிடந்தான் இத்துணை நாள். அழகிழந்து, பொலிவழிந்து, அத்தோடு ஆளும் உரிமையும் மறைந்து, அடிபட்ட புலியாய், தாக்குண்ட சிங்கமாய், சிறகிழந்த புறுவாய்த் திண்டாடுகிறான்.

அவன் வாழ்வு அந்த அந்தப்புரத்தில்கூடப் பிரதிபலிக்கிறதே! ராணி ராக்காத்தாளும் சிவஞானமும் அங்கே நின்றுகொண்டிருக்கின்றனர். அவர்கள் காலடியில் அடிபட்ட புறா ஒன்று வந்து விழுகிறது. துடிதுடிக்கும் அந்த வெண்புறாவின் பட்டுச் சிறகில் ரத்த மழை! ஏன்?

"கழுகு துரத்தியிருக்கிறது! சிறகு ஒடிந்திருக்கிறது! அனாதைப் புறா; ஆதரவில்லாமல் இங்கே வந்து விழுந்திருக்கிறது!" என்று ராக்காத்தாள் சொன்னதும், 'இதை நாம் காப்பாற்றுவோம் பெரியம்மா!" என்கிறான் சிவஞானம். அந்தப் பிஞ்சு உள்ளம் அடிபட்ட புறாவைக் கண்டு இரக்கம் பொழிகிறது. ஊமைத்துரை சின்னமருது சொன்னபடி தனியாக மறைந்திருக்கிறான். அவன் நினைத்திருப்பான்: அடிபட்ட புறாவுக்கும் சிவகெங்கை மக்கள் அனுதாபம் காட்டுகின்றனர். அங்கே சுருண்டு விழுந்த புறாவுக்குக்கூடப் பழமும் பாலும் பயறும் தந்து ஆதரவு காட்டப்படுகிறது. பறவைக்குக் காட்டப்படும் அன்பு, அதனினும் மேலான மனிதவர்க்கத்திற்குக் காட்டப்படாமலா போகும்?



நம்பிக்கை இழைகள் இப்படிப் பெருகி ஓடிக் கொண்டிருக்கின்றன. எப்படியோ, மருதரசரை நம்பி வந்துவிட்டதால் தவறாது உதவக் கேட்டுக் கொள்கிறான் ஊமைத்துரை.

சின்னச்சாமி தூங்கிக்கொண்டிருக்கிறான். கண்ணுத்தாளுடன் முத்தழகு பேசியவாறே, ஊமைத்துரை வந்திருப்பதையும் உருவாகியுள்ள சூழ் நிலையையும் விளக்குகிறான்.

"வெள்ளையரின் பெரும்பகைவன் ஊமைத்துரை வந்துவிட்டான்.
வேல்மறவர் பெரும்படைக்கு வேலை வந்துவிட்டது.
இனி அந்நியன் ஆதிக்கம் மாளும்; திராவிடர் சமுதாயம் வாழும்!"

என்று முழங்குகிறான் முத்தழகு. தூங்கிக்கொண்டிருந்த சின்னச்சாமியின் செவியை இச்சொற்கள் தைக்கவும் விழித்துவிட்டான். ஆனால் தூங்கும்

பாவனையிலேயே நடப்பவற்றைக் கவனிக்கிறான். "முத்து, மெதுவாகப் பேசு! மெதுவாகப் பேசு!" என்று வேண்டுகிறாள். பாம்பின் காலறிந்த பாவையாயிற்றே அவள். தாம் பேசுவது சின்னச்சாமியின் காதில் விழுந்தால் என்னவாகுமோ? சூழ்ச்சி, வஞ்சம், பொறுமை, துயர்கொட்டும் தீமை ஆகிய அத்தனைக்கும் மொத்த வியாபாரியாயிற்றே அவள் கணவன். அண்ணன் நல்லவன் என்று அவன் நம்பலாம்—நடந்தன அறியாததால். தம்பியின் உடன் பிறந்தே கொல்லும் வியாதியாய் அண்ணன் வாய்த்திருப்பதை அவள்தானே அறிந்திருக்கிறாள். ஆனாலும் சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது சோர்ந்து வாடுகிறாள். முத்துவுக்கோ அது தெரியவில்லை. நாட்டு நிலைமையை முழக்கித் தீர்க்கிறான். அப்போதுதான் தூங்கி எழுந்துவந்த பாவனையில் சின்னச்சாமி கூடத்திற்கு வந்து "உண்மைதான் தம்பி. ஊமைத்துரை வந்துவிட்டார். எனக்குக்கூட உணர்ச்சி வந்துவிட்டது. தம்பி உன் இஷ்டப்படியே மருதுபாண்டியரிடம் வேலை செய்வது என்று முடிவுசெய்துவிட்டேன்!" என்று பாகுமொழி சிந்துகிறான். கள்ளமனத்து அண்ணனின் குள்ளநரித்தனமும் அறியாத தம்பி, அண்ணி எவ்வளவு தடுத்தும் அண்ணனை அரண்மனையில் சேர்த்துவிடுகிறான். அரண்மனையில் சேர்ப்பதற்குமுன், அண்ணி ஏன் அந்த உறுதிமொழி கேட்கிறாள் என்றுகூட அறியாது ஓர் உறுதியைத் தந்துவிடுகிறான். தன்னாலும் சரி; மற்ற எவராலும் சரி—சின்னச்சாமியின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் வராது என்று அண்ணிக்கு அவன் உறுதி கூறுகிறான்.

★

சிறுவயலிலிருந்து பெரியமருது திரும்பும் வழியில் ஒரு சிற்றூரில் வெள்ளையரின் ஆட்கள் தண்டோரா போட்டு, தப்பி ஓடிய குமாரசாமியைப் பிடித்துத் தருவோர்க்கு 5000 பூவராகன் பரிசு தரப்படும் என்றும், அவருக்கு அடைக்கலம் கொடுத்தாலோ, ஆதரித்தாலோ கும்பினி இடும் கடும் தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்றும் கூறுவதைக் கேட்டு வருகிறார்.

சிவகெங்கை அரண்மனைக்கு வந்ததும் சின்னமருது பெரியமருதுவிடம் ஊமைத்துரைக்கு உதவலாமா என விசாரிக்கிறார். பெரியமருதுவோ பிடிவாதமாக மறுக்கிறார். "சிவகெங்கையின் எல்லைக்குள்கூட ஊமைத்துரை நுழையக்கூடாது!" என்கிறார் பெரியவர். அவன் எல்லையையும் கடந்து அரண்மனை உள்ளேயும் நுழைந்துவிட்டதை அவர் அறியார். தான் பேசுவதை மறைவிலிருக்கும் ஊமைத்துரை கேட்டுக்கொண்டிருப்பதையும் அவர் அறியார்.

அண்ணனிடம் பேசியபின் ஊமைத்துரையிடம் வந்தார் சின்னப்பாண்டியர். "சரித்திரம் அவரைப் பயமுறுத்தியிருக்கிறது. தைரியப்படுத்தும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுவரை நீங்கள் அமைதியாக இருங்கள்!" என்று ஆறுதல் சொல்கிறார். ஊமைத்துரைக்கு நம்பிக்கை போய்விட்டது. என்றாலும் கடைசிவரை பார்ப்போம் என்று இருக்கிறான்.

அவர் மனம் ஒரு நிலையில் இல்லை. ஊசலாடியது, ஓராயிரம் சிந்தனைகளால். தன்னால் எதற்கு, தழைத்தோங்கும் சீமைக்குத் தொல்லை வரவேண்டும் என்று எண்ணினானோ என்னவோ, தவித்துத் தினறினான். முடிவாக "வந்த வழியே போய்விடுவது, யாருக்கும் தொல்லை தராது!" என்ற எண்ணத்துடன் முக்காடு போட்டுக்கொண்டு செல்கிறான். அரண்மனையின் ஒரு பகுதியில் அவன் வந்துகொண்டிருக்கையில் பெரியபாண்டியரின் கண்களிலே பட்டுவிட்டான்.

"நில்! யார் நீ!" என்றார்.

"நான் ஓர் அனாதை!" என்றான்.

"பொய்! உண்மையைச் சொல்!"

"உம்...உண்மையைச் சொல்லிச் சொல்லி உயிர் வாதைப்பட்டவன் நான். அதிலே சூடுபட்டு விழுந்தவன் நான். எஞ்சியிருக்கும் உணர்ச்சிகளுக்கு ஓர் இடம் தேடி வந்தேன். இல்லை அதற்கு வழி என்று உங்கள் சொல்லாலே அறிந்தேன். போகிறேன். எங்கோ போகிறேன்!"

"புரியும்படி சொல். யார் நீ? யார் நீ?"

"பாளையங்கோட்டைச் சிறையிலே வாடி வதங்கியவன். தூக்குமேடையிலே அண்ணன் கட்டபொம்மனைத் துடிக்கவிட்டுத் துவண்டு நின்றவன் நான்! **அடிபட்ட புலி! திகைத்து நிற்கும் சிங்கம்! சிறகொடிந்த புறா! ஊமைத்துரை!"**

"ஊமைத்துரை! ஊமைத்துரை?"

"இப்போது நான் எங்கு போனாலும் என்னைப் பிடித்துவிடுவார்கள். இடைவிடாமல் போராடிய ஊமைத்துரை தன் தாயகத்திலேயே தங்குவதற்கு இடமில்லாமல் அகப்பட்டுக்கொண்டான் வெள்ளையரிடம் என்று வரலாறு கூறட்டும்.

சிவகெங்கையின் அமைதியை அழிக்க நான் தயாராய் இல்லை; அமைதியை அழிக்க நான் தயாராய் இல்லை! நான் வருகிறேன்!"

இதயம் வெடித்துப் பேசினார். பெரியமருதுவின் விழிகளிலும் நீர் சுரந்தது. அவலப் படைப்பாய்க் கிடந்த ஊமைத்துரையை அணைத்துக்கொண்டு, "இங்கேயே இருங்கள்! நான் கவனித்துக்கொள்கிறேன். நீங்கள் இருப்பது யாருக்கும் தெரியாமல் நான் சமாளித்துக்கொள்கிறேன்!" என்று கூறி அமைதிப்படுத்தித் தங்கச் செய்கிறார்.

★

ஊமைத்துரை சிவகெங்கை அரண்மனையில் உலவுகிறான்; ஆங்கிலேயர் முகாமில் சதி உலவுகிறது. தாய்நாட்டின் கழுத்தை நெறிக்கும் வஞ்சமதியினர் பலர் பெற்ற கைக் கூலிக்காகவும் பெறப்போகும் கைக் கூலிக்காகவும் பல்லைக் காட்டிக்கொண்டிருந்தனர். மேஜர் வெல்ஷின் புன்னகை கிடைத்தால் போதும் என்று கருதுகிற ஈனப் பிறவிகள் அத்துரோகிகள். உடன் பிறந்தவனையே காட்டிக் கொடுக்கின்றனர்.

நாட்டில் உள்ளூர எரிமலை புகைவதை அறிந்தோ அறியாமலோ முத்தழகுவின் வாழ்வில் விளக்கேற்றி வைக்க அவன் அண்ணி எடுத்துக்கொண்ட முயற்சிகளின்படி சிட்டு வீட்டார் முத்தழகு வீட்டிற்கு வருகின்றனர். சிட்டுவுக்கும் முத்தழகுவுக்கும் விரைவில் திருமணம் செய்வது என்று பேசி வெற்றிலைபாக்கு மாற்றிக் கொள்கின்றனர். அனைத்தையும் தாயின் இடத்தில் இருந்து செய்து வருகிறாள் அண்ணி கண்ணுத்தாள். . . .

★

அரண்மனைக் கோட்டையில் எச்சரிக்கை ஒலி எழுகிறது. வீரன் ஒருவன் ஓடி வந்து பெரியபாண்டியர்முன் நின்றான்.

"என்ன நடந்தது? ஏனிந்த எச்சரிக்கை?"

"கும்பினித்துரைகள் சிலர் வந்துகொண்டிருக்கிறார்கள்!" என்றான்.

கும்பினித்துரைகளா! ஏன் வர வேண்டும்?

சின்னமருது ஊமைத்துரையை மறைவிடத்திற்கு அழைத்துச் சென்றார்.

மேஜர் வெல்ஷ், காப்டன் மார்ட்டின், உடையணர் முதலியோர் வெள்ளைப் படைகளுடனும் துவிபாஷியுடனும் உள்ளே நுழைந்தனர். பெரியபாண்டியர் வரவேற்றார்.

★

"வாருங்கள் வெல்ஷ்! வாருங்கள் மார்ட்டின்!"

"How do you do Mr. Marudu." என்றான் வெல்ஷ்.

"வணக்கம். இப்படி அமருங்கள்." என்றார் பெரியமருது.

"ஓ! கௌரிவல்லபர். அமரலாமே!" என்றார்.

"வாருங்கள், வாருங்கள்! வணக்கம். யாரங்கே! பழங்கள் கொண்டுவா. பால் கொண்டுவரச் சொல்." என்றார்

"நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏது இப்படி இரவு நேரத்தில் திடீர் வரவு?"

"முன்கூட்டியே சொல்லி அனுப்ப நினைத்தோம்! எப்போதும் உங்கள் வாசல் எல்லோருக்கும் திறந்திருக்கும் என்று மேஜர் சொல்லிவிட்டார்." என்றார் உடையணர்.

"ஓஹோ! நம்மினத்தாரைவிட அந்நியர்கள் நம்மை நன்றாக அறிந்திருக்கிறார்கள்."

"Yes! Indeed. Marudu..." என்றார் வெல்ஷ்.

"ஆம்! உண்மை! மருதுசகோதரர்கள் கம்பெனியின் உண்மையான நண்பர்கள். அவர்களை நாங்கள் நன்றாக அறிவோம். கம்பெனிக்கு விரோதமாக அவர்கள் ஒருபோதும் போகமாட்டார்கள்." என்று மொழிபெயர்த்தான் துவிபாஷி.

"உண்மை. நமக்குக் கிடைத்த செய்தி பொய்யாகவே இருக்கலாம். ஊமைத்துரைக்கு இவர்கள் ஒருபோதும் அடைக்கலம் கொடுத்திருக்கமாட்டார்கள்! இல்லையா துரை அவர்களே!"

"ஊமைத்துரையா? கட்டபொம்ம நாய்க்கரின் தம்பி குமாரசாமியா! எங்கே இருக்கிறார்? சௌக்கியமாக இருக்கிறாரா?" என்றார் சின்னவர்.

"இல்லை. நிச்சயமாக இல்லை! ஊமைத்துரை இங்கு வரவுமில்லை அவருக்கு நாங்கள் அடைக்கலம் தரவுமில்லை. என்றார் பெரியமருது.

"உண்மையாகவா!" என்றார் வெல்ஷ்.

"உண்மையாக!" என்றார் மருதரசர்.

'மருதையா! வீணாக ஊமைத்துரையால் கும்பினியாரின் வம்பை விலைக்கு வாங்காதே! உன்மீது அதிக அன்புகொண்டிருக்கிறார்கள் கும்பினியார். இந்த அரசு உனக்கே நிலைக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்" என்று குத்தலாகப் பேசினார் உடையணர்.

"You are the first and the best friend of our company" என்றார் கேப்டன் மார்ட்டின்.

"கம்பெனியின் முதல் நண்பரும் முக்கிய நண்பரும் நீங்கள்தான்! இந்த நட்பு அழிந்துவிடக்கூடாது என்றே மேஜர் வெல்ஷ் துரை அவர்களும், கேப்டன் மார்ட்டின் துரை அவர்களும் விரும்புகிறார்கள்" என்றார் துவிபாஷ்.

இமையும் விழியும் பகையானல், இயற்கை சிரிக்காதோ!

உடையணர் தன் உபதேசத்தை ஆரம்பித்தார்.

"காடல்குடிப்பாளையத்தின் கதி உனக்குத் தெரியும்!

ஏழாயிரம் பண்ணை என்ன ஆயிற்று என்று அறிவாய்!

நாகலாபுரம் பட்டபாட்டை நாடு மறவாது!

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையாதிபதி வீரபாண்டிய கட்டபொம்ம நாயக்கர் கர்ச்சனை செய்தார்; கத்தியும் எடுத்தார். கடைசியில் கயத்தாற்றுப் பாதையில் கட்டைப் புளியமரம் அவரைக் காவு கொண்டது!"

"படமாத்தூர் கௌரி வல்லப உடையணத்தேவர் பயமுறுத்திப் பார்க்கிருர், மருதுபாண்டியரை!" என்று பெரியமருதுவும். 'தேவரே! சரியாகவோ தவருகவோ கம்பெனிக்கு நண்பர்கள்தாம் நாங்கள்! இந்த நட்பு அழிந்து விடக் கூடாதே என்று கவலைப்பட வேண்டியவர்கள் கம்பெனியாரே தவிர நாங்களல்ல! பயத்தால் அல்ல இந்த நட்பு; பழக்கத்தால்! வந்தோரை உபசரிக்கும் பரம்பரைப் பண்பால்! ஊமைத்துரை இங்கே இல்லை என்பதை ஒரு முறைக்கு மறு முறையும் சொல்கிறோம். இருக்கிருர் என்று முடிவு கட்டினுல், என்ன செய்யவேண்டுமோ, அதை உங்கள் முகாமுக்குச் சென்றே செய்யுங்கள்!" என்று சின்னமருதுவும் பேசினர்.

ஓரக்கண்ணுல் பார்த்துவிட்டுப் பேசினுன் வெலஷ். "நல்லது மருது! எப்படியாவது ஊமைத்துரையைப் பிடித்து ஒரு சமரசத்துக்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்."

"எங்களை ஆழம் பார்ப்பதற்கு இது ஒரு வழியா?" என்ருர் சின்னமருது.

"ஒரு போதும் இல்லை! ஒரு போதும் இல்லை!" என்ருன் காப்டன் மார்ட்டின். சின்னமருது கேட்ட கேள்விக்கு உடையணர் பதில் சொன்னுர்.

"இந்தப் பணியை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம்?"

"நட்பு! பாசம்! பழக்கம்! பண்பு!"

"நட்பைப்பற்றியும் பண்பைப்பற்றியும் நீங்களா பேசுகிறீர்கள்!"

"மார்ட்டின் துரை அவர்களே! பழகிய பழக்கத்துக்காக இந்தப் பணியை நாங்கள் மேற்கொள்ளுகிறோம்.

பாண்டிய மண்டலத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக ஊமைத்துரையைத் தேடிப் பிடிக்கிறோம்! ஆனுல், நம்பி வரும் ஒருவனை நயவஞ்சகமாகப் பிடிக்க யத்தனித்தாலோ, கொல்ல முயன்ருலோ, நீங்கள் அமைதியை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கிறேன்."

"சே! சே! கம்பெனியார்கள் பண்பு மிக்கவர்கள்! தொடமாட்டார்கள் ஊமைத்துரையை!" என்ருர் உடையணர்.

"ஆமாம் மருது! கூடிய சீக்கிரம் ஊமைத்துரையோடு உங்களைச் சந்திக்கிறோம்!" என்று பெறுகிருர் பெரியமருது.

"வணக்கம்" என்றதும் கலைகின்றனர்.

★

"மருதையா! பொய்யே சொல்லாத உங்கள் வாய் எனக்காக ஒரு பொய் சொன்னதே! என் உயிர் உள்ளவரை உங்களை மறக்கமாட்டேன்!"

இது ஊமைத்துரை உரைத்த உரை.

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்.

உளவறிந்துதான் கூட்டி வந்திருக்கிருர் உடையணத்தேவர். என்ருலும் கனிவோடு பேசுகிருன் வெல்ஷ்.

என் கண்களுக்கு நம்பிக்கை நட்சத்திரம் தெரிகிறது. இந்த சமரசம் பயனளிக்கிறதா என்று பார்ப்போம்!" என்ருர் பெரியமருது.

★

அரண்மனைக்குப் போனேர் என்ன ஆயினர்? முடிவு என்ன? சின்னச் சாமி துடிக்கிருன். ஊமைத்துரை வெள்ளைத் துரைகளிடம் அகப்பட்டானு? ஓடி ஒளிந்துகொண்டானு? என்ன ஆனுன்? வெற்றியோடு திரும்பினரா வெள்ளைத் தளபதிகள்? வேதனையான பதில் கிடைத்திருக்கிறதா? எதுவுமே தெரியவில்லை! அவன் திண்டாடிக்கொண்டிருந்தான். தித்திக்கும் சேதி வந்தால் அவன் வாழ்வு வளம்பெறும். மாருனல்..."சே அப்படி ஆகாது!" என்று அவன் தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டான். அப்போது நடந்தவற்றை விளக்கினுர். சின்னச்சாமி அப்போதும் தளர்ந்துவிடவில்லை. எப்படியும் காரியம் வெற்றிபெற இன்னும் ஒரு வழி இருக்கிறதே! அன்று தம்பி அரண்மனையில் சேர்த்துவிடுகிறேன் என்று சொன்னுன். இன்று அதைப் பயன்படுத்திக்கொண்டு அரண்மனைப் பணியில் சேர்ந்துவிட்டால்...

தம்பியிடம் சொன்னுன், தன் ஆசையை. அவனும் முன்பே அண்ணன் தன்னிடம் இதைச் சொல்லியிருந்ததால், மருதரசரிடம் அழைத்துச் செல் கிருன். மருதரசரும் அவனை நம்பித் தன்னிடம் அரண்மனைப்பணியில் சேர்த்துக்கொண்டார். அவன் எதிர்பார்த்திருந்த வாய்ப்புக் கிடைத்து விட்டது. வேட்டைக்குரிய காலம் வந்துவிட்டது; பறவையும் எதிரே நிற்கிறது; குறியும் பார்த்துவிட்டான்...

ஊமைத்துரையைப்பற்றிப் பேச மருதரசர் சபைக்கு வெல்ஷ் மற்றவர்களுடன் வந்து சேர்ந்தான். ஊமைத்துரையும் சின்னமருதுவும் முத்தழகும் ஒரு மருங்கிருந்தனர். வெல்ஷ் முன்பு பேசியவற்றிற்கு மாருக, தன் திட்டங்களை விரித்தான்

ஊமைத்துரையை விடுதலை செய்து அவனுக்குரிய நாட்டை அவனிடம் திரும்பத் தந்துவிட வேண்டுமென்ருர் பெரியமருதரசர். முன்னுள் நிபந்தனைகளுடன் பேசுவதற்கு ஒப்பிச்சென்ற வெல்ஷ், ஊமைத்துரையைத் தன் கண்ணெதிரே கண்டதும் புரண்டு பேசுகிருன். அவன் எந்த நிபந்தனைக்கும் உட்படாது, ஊமைத்துரையைக் கைது செய்வதிலேயே குறியாய் இருக்கிருன். மருதுபாண்டியரிடம் கொண்டிருந்த நட்பை மறந்து, தந்த வாக்கை மறந்து, ஊமைத்துரைக்கு விலங்கு பூட்டும்படிக் கட்டளை பிறப்பிக்கிருன் வெல்ஷ். காப்டன் மார்ட்டின் விலங்கு பூட்ட முனைகிருன். விலங்கு சுக்கு நூருகிறது; தூள் தூளாகிறது; வீர மறவர் முன்னே அவர் தம் தோழனை விலங்கு பூட்டி இழுத்துச் செல்தல் எளிதாமோ? சொன்ன சொல்லைமீறிய வெல்ஷின் முகத்தில் கரி பூசப்பட்டதும், அவன் கொதித்தெழுந்தான். வீணுக வெள்ளையரின் விரோதத்தைப் பெறுதல் எவ்வளவு தீங்கானது என்பதை விளக்கினுன். "நம்மை வெல்வார் யார்?" என்ற இறுமாப்பு அவனுக்கு. மார்ட்டினும் சினத்தைக் கக்கினுன். "கோபத்தை வளர்க்காதே!" என்று கொக்கரித்தான். என்ருலும் மன உறுதியும் தாய்நாட்டுப் பற்றும்கொண்ட மாமறவர்க்கு இவை எல்லாம் ஒரு தூசே!

சுதந்திரம் எவராலும் எக்காரணத்தாலும் பறிக்கப்படக்கூடாது!

சொன்ன சொல்லை மீறியவனுக்கு எதனுலும் அடிபணியக்கூடாது!

இவை இரண்டுமே மருதரசரின் முன்னுள்ள கொள்கைகள். ஊமைத்துரை தமது நண்பன். அதற்கு மேலாகத் தம்மால் கட்டாயம் காக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளவன் அவனே! எவன் எக்கணையைத் தொடுத்தாலும், எப்பழியைப் பொழிந்தாலும், கடமை ஒன்றே பெரிது! தாய்நாட்டு மானமொன்றே மேலானது!

வெல்ஷ் மிடுக்ககாகக் கொக்கரித்தான் போர் மூளும் என. "கவலையில்லை! எதற்கும் தயார்!" என்றனர் மருதரசர்.

அறைகூவலை ஏற்றனர்; அந்நியரை எதிர்த்தனர். ஆங்கிலேயர் தம் முகாமுக்குத் திரும்பிப் போருக்கான ஏற்பாடுகளைச் செய்தனர் எளிதிலே முடிந்துவிடும் என அன்னுர் நம்பியது இத்துணைப் பெரிதாய்விட்டதே!...

நள்ளிருள்... அரண்மனையில் எல்லோரும் அயர்ந்திருக்கும் நேரம். பெரியமருதரசர் நிலப்படம் ஒன்றைப் பார்த்துக்கொண்டு இருந்தார். அப்போது சதித்திட்டம் வெடித்தது. அவரைக் கொல்ல முயன்ருன் ஒருவன். எச்சரிக்கையாகிவிட்டதால் மருதரசர் தப்பிவிட்டார். கொலைவாள் தவறிவிட்டது; கொலைகாரனைப் பிடிக்க ஓடினர். அவன் ஓடிவிட்டான். மருதரசர் அரண்மனைக்குள்ளேயே நுழைந்து அவரைக் கொலை செய்ய முயன்றவன் யார்?

குற்றவாளியின் வீட்டுக்கதவு தட்டப்பட்டது...

நள்ளிரவில் தம் வீட்டுக் கதவு தட்டப்பட்டதும். மருதரசரின் தளபதி முத்தழகு திறக்கிருன்; திகைக்கிருன்! எதிரே நின்ற கறுத்தான் உள்ளே வந்துகொண்டே கூறுகிருன்.

"உங்கள் அண்ணனையும் உங்களையும் கைது செய்யும்படி மருதரசர் உத்தரவு" என்ருன் கறுத்தான்.

கண்ணுத்தாள் திகைத்தாள். முத்தழகு கேட்டான்:

"அண்ணனையும் என்னையுமா...எதற்காக?"

"உங்கள் அண்ணன் பெரியமன்னரைக் கொல்ல முயன்ருர். இந்தச் சதியில் உங்களுக்கும் பங்கு இருப்பதாக மருதரசர்கள் சந்தேகிக்கிருர்கள்."

"என் அண்ணன் கொல்ல முயன்ருர்? சதியில் எனக்குப் பங்கா...?"

கண்ணுத்தாள் ஏதும் செய்ய இயலாது நிற்கின்ருள். கலங்கித் தவித்தான் முத்தழகு. பின் மனதைத் திடப்படுத்திக்கொண்டு "அண்ணி, எல்லாம் முடிந்துவிட்டது. போய் வருகிறேன்...போய் வருகிறேன்." என்று வீரர்களுடன் போகிருன். கண்ணுத்தாள் மயங்கி வீழ்கிருள். மன்னரைக் கொல்லும் முயற்சியில் தோற்ருேடி வந்து இதுவரை காவலர்களுக்குத் தெரியாமல் ஒளிந்திருந்த துரோகி சின்னச்சாமி, மயக்கம் தெளிந்த மனைவியிடம் சொல்கிருன்:

"அழாதே, கண்ணுத்தாள். அழாதே! அரசியல்வாதியின் மனைவி கணவனைத் தவிர பிள்ளையிடத்தில்கூடப் பிரியம் வைக்கக்கூடாது. நாங்கள் நாடகமாடிக் கொண்டிருப்பது. வேடிக்கையான உலகம். தந்தையை மகன் எதிர்ப்பதும், தம்பியை அண்ணன் வதைப்பதும், சாதாரணம்...

காரியத்திற்காகப் பகைவரின் காலைப்பிடித்து நண்பராக்குவோம். காரியம் முடிந்ததும் காலால் உதைத்து, நண்பர்களைப் பகைவர்களாக்குவோம்."

கணவனின் "உபதேச மொழி"களைக் கேட்ட கண்ணுத்தாள் திகைக்கிருள். வேறென்ன செய்யமுடியும் அவளால்.

இதற்கிடையே மருதிருவர், நிகழ்ந்ததை எண்ணி வருந்துகின்றனர்; கொதிக்கின்றனர். பெரிய மருது தன் நெஞ்சு வெடித்துப் பேசினுர்:

"நண்பர்களை எல்லாம் பகைவர்களாகச் சந்திக்க வேண்டிய காலம் வருமென்று நான் கனவிலும் கருதியதில்லை."

சின்னமருது சினத்தோடு பேசினர் :

"நண்பர்கள் பகைவர்களாகவில்லை, அண்ணு! பகைவர்கள் நண்பர்களைப்போல நடித்திருக்கிருர்கள்!"

சற்றுநேரத்தில் முத்தழகு கொண்டுவரப்பட்டான். எந்த அரண்மனையில் அவன் தலைநிமிர்ந்து உலாவினுனே அதே அரண்மனையில் தலைகுனிந்து நிற்கிருன். எங்கே வீரஉரைகளை முழங்கினுனே, அங்கே ஊமையாய் நிற்கிருன். முத்தழகும் பெரியவரும் சின்னவரும், இப்படிப் பேசிக் கொண்டனர் :

சின்னமருது : முத்தழகு! இன்னுமா உன்னை நம்பச் சொல்கிருய்?

முத்தழகு : நம்ப வைப்பதற்கு என்னிடம் சாட்சிகள் இல்லை!

சின்னமருது : காட்சி உன்னைக் குற்றவாளி என்கிறது. சாட்சி எதற்கு முத்தழகு? கொல்ல வந்தவன் உன் அண்ணன்! கொண்டுவந்து சேர்த்தவன் நீ! குற்றவாளி யாரென்று கண்டுபிடிப்பதற்கு விசாரணைகூடத் தேவையில்லை! இந்தத் திட்டத்தைப் போட்டவனே நீதான் என்கிறேன்!

முத்தழகு : (திடுக்கிட்டு) அரசே!

சின்னமருது : கள்ளன் நீ! கயவன் நீ! காட்டிக்கொடுக்கும் துரோகி நீ!

முத்தழகு : ஐயோ அரசே! கத்தியாலே வெட்டிவிடுங்கள். வார்த்தையாலே கொல்லாதீர்கள்! என் உடம்பிலே ஓடும் குருதியின் ஒவ்வொரு துளியும் என் தாயகத்தையே நேசிக்கிறது!

துடித்தெழும் கைகளும் தினவுகொண்ட தோள்களும் என் தலைவர்களைக் காப்பாற்றவே இதுவரை பயன்பட்டிருக்கின்றன. கயவரைக் கருவறுக்கும் என் நெஞ்சம் உங்கள் கருணையை அழிக்குமா? களிற்றின் மேல் பாயும் என் கைவேல், உங்கள் கனிந்த மார்பின்மேல் பாயுமா? வெள்ளைத் தலைகளை வெட்டி வீழ்த்தத் துள்ளி எழும் என் வீரஉணர்ச்சி, உள்ளத்தால், வாக்கால், உயர்ந்த உங்களைச் சாய்க்க முயலுமா? அரசே! நான் நிரபராதி என்று ஒருமுறை கூறிவிட்டு, உங்கள் கையாலேயே கொன்றுவிடுங்கள்.

தனித்து விழும் தலை உங்கள் தாள்களிலே விழட்டும்! பெருகி ஓடும் என் குருதி வெள்ளம், என் நன்றி மறவாத் தன்மையைப் பாடட்டும்!

அரசே! பகைவரின் வில்லுக்கும் வேலுக்கும் அஞ்சாத நான் துரோகி என்ற ஒரு சொல்லுக்கு அஞ்சுகிறேன்."

எவ்வளவோ சொல்லியும், பெரியவர் ஓரளவு நம்பியும், சின்னவர் சற்றும் நம்பவில்லை. இறுதியாகப் பெரியபாண்டியர் ஒரு நிபந்தனை விதித்தார்: இன்றிலிருந்து 45 நாட்களில் சின்னச்சாமியைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். அன்றேல் 45 வது நாள் பெரியமருதரசரின்முன் முத்தழகு வந்து, அவர் தரும் தண்டனையை ஏற்கவேண்டும்.

தன் தூய்மையையும் தொண்டையும் நிரூபித்துக் காட்டவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்த முத்தழகு அப்படியே செய்வதாக ஒப்பி வெளியேறுகிருன். இருண்ட உலகம் அவன் எதிரே கிடக்கிறது. எங்கே செல்வான் அவன்? இனி, யாரை நம்புவான் அவன்? இந்த உலகில் எல்லோருமே மோசடிக்காரர்களா? கூடிக் குலவிக்கொண்டிருந்து குரல்வளையை நெறிப்பவர்களா? குலுக்குகின்ற கையைக் குலுக்கிக்கொண்டே முறிப்பவர்களா? உடன்பிறந்த அண்ணனே உயிருக்கு உலைவைக்கும் கொடியவனு? நம்பமுடியவில்லைதான்; ஆனுலும் நடந்துவிட்டதே.

இதுதான் அவன் வீடு...இல்லை! இல்லை! வஞ்சகப்புலி பதுங்கிக்கிடக்கும் குகை! சூழ்ச்சிநரி மறைந்துகிடக்கும் காடு! வெறிபிடித்த விலங்குகள்தான் இங்குக் குடியேற வேண்டும்! வீட்டுக்குள் நுழையவே அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனுலும் ஒருமுறை அவன் நுழைந்து திரும்பவேண்டியிருக்கிறதே...



அவள்தான் அண்ணி! பெற்றதாயினும் மேலாக, இவள்மேல்தான் பாசத்தைப் பொழிந்தான்; இவள்மேல்தான் அன்பைக் கொட்டினுன். இவள் தான் எல்லாம் என்று நம்பிக்கிடந்தான்.

அவளே ஏமாற்றிவிட்டாளே! கணவன் கொலைகாரன் என்றறிந்தும் மூடி மறைத்துவிட்டாளே! இவளைத்தான் கணவனுக்காக, மனச்சாட்சியையும் தாயகப் பெருமையையும் தத்தம் செய்த தியாகி என்று பாராட்டி வாழ்த்து மடல் தந்து, கோவில் கட்டிக் கும்பிட வேண்டும்.

அண்ணி பேசாது நின்ருள். அவன் தன் நெஞ்சக் குமுறலைத் திறந்து காட்டினுன். "பாசமும் பண்பும் மானமும் மறமங்கையர் மாண்பும் இவைதாமா?" என்று கேட்டான். அன்று கட்டாரியைக் கண்டு நடுங்கினுளே! புலிநகத்தைக் கண்டு மருண்டாளே! "ஏன் இப்படி மருள்கிருய்" என்றதற்கு "அந்த நினைவு; இந்த நினைவு" என்று ஏமாற்றினுளே! அன்றே சொல்லியிருந்தால், சின்னச்சாமியை மருதரசரிடம் சேர்த்திருக்கவும் மாட்டான்; இந்த ஈனச் செயலுக்குப் பலியாகியிருக்கவும் மாட்டான். சொன்னுளா? தன் கணவன் உயிர் போய்விடுமே என்றஞ்சி மூலையில் அல்லவா கிடந்தாள்!

தனது மானம் பழிக்கப்பட்டதால், வெடித்தெழுந்த முத்தழகு அண்ணியிடம் வினுக் கணைகளைத் தொடுத்தான். அவளும் தான் என்ன செய்வாள்? "இமையும் விழியும் பகையானுல் இயற்கை சிரிக்காதா? நகமும் சதையும் உடலும் உயிரும் மோதிக் கொண்டால் உபத்திரவம் யாருக்கு? இரண்டுக்கும் தானே இடையூறு!" என்று ஆயிரம் முறை எடுத்துச் சொன்னுளே கணவனுக வாய்த்த துரோகியிடம். அவன்தான் கேட்கவில்லையே! பேதை-பெண்ணுகப் பிறந்த அபலை, ஆயிரம் சொல்லியும், சாயவில்லை சின்னச்சாமி.



துரோகி என்கின்ற மக்களே, பணத்தைக் கண்டால், பதவியைப் பார்த்தால் பல்லிளித்து நிற்பர்! "ஆகா! இவனைப்போல் உண்டா?" என ஆலவட்டம் சுற்றி வாழ்த்து மாலை போடுவர்; கூடி நின்று, கொடி கட்டிய மண்டபத்து அடிபணிந்து நிற்பர். எனவே எடுத்த காரியத்தை முடித்துவிடத் தயங்குதல் ஆகாது! இப்படித்தான் தத்துவம் பேசினுன் சின்னச்சாமி. அவள் அலறித் துடிக்கத் துடிக்க "வந்தால் மந்திரியாக வருவேன்; அன்றேல் திரும்பியே வரமாட்டேன்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான். அவள் பட்டபாட்டை முத்தழகு அறியான். அவனும் அவளை வஞ்சகி என நினைத்து ஒதுக்கிவிட்டான்.

வாழ்கையின் வழியை-போராட்டத்தின் பாதையை அறிந்துகொள்ளும் அமைதி அப்போது அவனுக்கு இல்லை. ஆனுல் வந்தது வரட்டும்.

பொருள் இருந்தால் புகழ்தானே வரும் எனப் புதுத்தத்துவம் கற்பித்துப் பொல்லா வழிகளில் சென்ற அண்ணன், சூழ்ச்சித் திட்டங்களை அறிந்திருந்தும் சொல்லாது மறைத்த அண்ணி ஆகிய இருவரும் இருக்கும் வீட்டில் ஏன் இருக்க வேண்டும். பரந்த உலகம் இருக்கிறது. அதில் எந்த மூலையில் கிடந்தாலும், மானத்தோடு கிடந்தால் போதும் என்ற வெறுப்பு மனப்பான்மையோடு அவன் வெளிப் புறப்பட்டுவிட்டான். வழியில் எத்தனை பயங்கரங்களோ? நாற்பது நாட்களுக்குள் அண்ணனைப் பிடித்துத் தர வேண்டும்! அன்றேல் செய்யாத குற்றத்திற்காகப் பொல்லாத பழியை ஏற்க வேண்டும். எங்கெங்கோ தேடினுன். காடு மேடுகளில் அலைந்தான்; கள்ள மனத்தார் பதுங்கும் இடங்களை எல்லாம் குடைந்தான்; ஊண், உறக்கமின்றித் திரிந்தான்; இரவுபகலாய்ச் சுற்றினுன் சின்னச்சாமி எளிய மனிதனல்ல; சூழ்ச்சியில் பிறந்த குள்ளநரி. முத்தழகின் கண்களில் அந்தக் குள்ளநரி படவேயில்லை.

நாட்கள் கடந்துகொண்டேயிருந்தன. சூரியன் மறைந்தது; வந்தது. சந்திரன் எழுந்தது; விழுந்தது. மலர்கள் அவிழ்ந்தன; மணந்தன; கருகின; மறைந்தன. சின்னச்சாமிமட்டும், தட்டுப்படவேயில்லை.

மேஜர் வெல்ஷ் தன் படைகள் தயாரானதும் போர்முரசு கொட்டிவிட்டான். ஊராளத் துடித்த உடையணரும் காட்டிக் கொடுக்கும் சின்னச்சாமியும் அவனுக்கு வாழ்த்துப் பாடிவிட்டனர்.

சேதி அறிந்த மன்னர் பெரியமருது, சின்னமருதுவுடன் காளையார் கோவிலுக்குச் சென்ருர். ராக்காத்தாளையும் பொன்னுத்தாளையும் குழந்தைகளையும் அங்கே அழைத்துக்கொண்டு வர வேண்டிய பொறுப்பை ரகுநாதத் தேவருக்குத் தந்துவிட்டு, மருதரசர் சென்ருர்.

செழித்துக் கொழித்த சீமையில் அழிவின் ஆரவாரம்! புன்னகைப் பூக்கள் மலர்ந்த பொன்னெனிர் சோலையில் போரின் முழக்கம்! அன்பும் அமைதியும் குலவிய இடத்தில் அவலமும் குழப்பமும்!

மறவர், போரென்ருல் மயங்கமாட்டார். மருதரசரும் மருளவில்லை. ஆனுல்... ஆற்காட்டு நவாபால் படாத பாடுபட்டு, அந்தத் துன்பத்திலிருந்து மீண்டு ஏழாண்டுகளாக இருந்த அமைதியும், அப்போது மக்கள் முகத்தில் தவழ்ந்த அமைதியின்பமும் அதற்குள் கலைந்துவிடுவதா? மக்களுக்கு அமைதியான வாழ்வைத் தர வேண்டியதுதான் மன்னர் கடமை. அந்த அமைதியான வாழ்வோ அடிமைத்தனத்தின் அடிப்படையில் எழுந்ததாக இருக்கக்கூடாது.

சிந்தனை பல இப்படி ஓடிய பின்னர் மன்னர், நாட்டில் எதிரொலிக்கும் குரல்களை மாற்றுருவில் சென்று உற்றுக் கேட்கத்தான் செய்தார் தூய விடுதலையை நிலைநாட்ட ஒரு போர் என்றதும் துடித்தெழுந்தனர் சிறுவரும். ஆங்கிலப் பகையை எதிர்க்க வீங்கு தோள்குமரரும், ஓங்குவலி மறவரும் ஆயத்தமாவதைக் கண்டபின்தான் அவர் போருக்கு இறங்கினுர்.

ஊமைத்துரைக்கு உதவியதால்தான் இத்துணைத் தொல்லை என ஊரில் சிலர் பேசிக்கொண்டாலும், அவர் கலங்கவில்லை. தன்னை நம்பி வந்த ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததனுல் வரும் எந்த ஆபத்தையும் அவர் தாங்கத் தயாரானுர். செயல் நல்லதெனின் உயிரும் கொடுக்கும் மரபைச் சேர்ந்தவராயிற்றே சிங்கமருது. எனவேதான் அறைகூவலை ஏற்ருர்.

மகரக்கொடி உயர்ந்தது! மான மறவர் நெஞ்சுயர்த்தினர். முதல் நாள் போர் தொடங்கிற்று! காளையார்கோவில் இரணகளமாயிற்று. இரத்த வெள்ளத்திலே தலைகள் மிதந்தன. வாளும் வேலும் தாங்கிய மறவர்கள், வஞ்சினம் கூறிநின்றனர். புலிநிகர் வலிவுடையார், மலைநிகர் நெஞ்சத் துணிவுடையார், மருதரசர் மருங்கு நின்றனர். தாயகத்தின் நாயகங்கள், சரித்திரத்தின் ஒளிமணிகள், சிவகெங்கைச் சீமை புகழ் பாடினர்; பகைசாடினர். முத்தழகுவை மட்டும் காணேம்? எங்கே முத்தழகு?

எங்கே சின்னச்சாமி...? எங்கே வஞ்சகன்...? எங்கே துரோகி..? எங்கே கைக்கூலி? எங்கே? எங்கே? தேடி அலைகிருன் கண்ணுத்தாள். குடும்பப்பெயரையும் குலப்பெருமையையும் அழித்துவிட்ட அந்தக் கொடியவன் எங்கே? எங்கே?



★

★ போர்! போர்! போர்! ★

காதலி நல்லாள்–மறக்குலக் கண்ணாள் – மாதரசி சிட்டுப்பெண்ணாள், மயங்கினாள்; தவித்தாள். கண்ணனைய காதலன் கண்ணிலே படவேயில்லை. கவலை தீர்க்கும் அருமருந்தான – களைதீர்க்கும் நல்விருந்தான அந்தக் கட்டழகன் பார்வையே கிடைக்கவில்லை.

முதல் நாள் போர் முடிந்தது. யார் புறமும் வெற்றி தோல்வி என்றில்லை. இரண்டாம் நாள் போர் தொடங்கிவிட்டது. காளையார் கோவிற் காடும் ஊரும் அதிர்கிறது. வெற்றி வெள்ளையருக்கா? விடுதலை வீரர் மருதரசருக்கா? யாருக்கு?

அன்றையப் போரில் குறிப்பிடத்தக்கது, ஊமைத்துரை மைதானது ஒன்று. கண்ணின் இமைபோல் காத்தனர் மருதரசர் என்றாலும் வெள்ளைக் கழுகுகள் அவரைக் கொத்திவிட்டன.

மண்டபம் ஒன்றில் ஓய்வெடுத்தனர் மருதரசர்.

"நாட்டுப் பற்றும் வீட்டுப் பற்றும் வேறு வேறுதான்" என்று பெருமூச்சு விட்டார் பெரியபாண்டியர்.

"இல்லாமலா...அடையாளம்கூடத் தெரியாத ஒரு வீரன் எவ்வளவு பாடுபட்டான்!" என்று கூறி ஒப்பிய சின்னமருது, "நாளை அந்த இளைஞனை இந்த மண்டபத்திற்கே அழைத்து வருவோம்!" என்றும் கூறினர்.

இரண்டாம் நாள் போர் தொடங்கியது. சிவகெங்கைச் சீமையின் படைகள், வலிவுடன் போரிட்டன. இப்படைகளின் துணிவைக் கண்ட வெள்ளையர், மருதரசரைக் கொன்றுவிடின் மருண்டோடுவர் பிறர் என்று கணக்குப்போடுகின்றனர். மார்ட்டின் மருதரசர் மேல் குறி வைக்கிறான். சற்றே தவறினால் குண்டு பெரிய மருதுவைக் கொத்தியிருக்கும். மின்னல் வேகத்தில் ஒரு வீரன் இடையில் பாய்ந்து, மார்ட்டின் பெரிய பாண்டியர்மேல் வைத்த குறியைத் தடுத்துத் தன்மேல் தாங்கிக்கொள்கிறான். காயம்பட்ட அவ்வீரனைத் தமது மண்டபத்திற்குக் கொண்டு செல்கின்றனர். அவன் செயல்களால் மனம் மகிழ்ந்து. "மார்புகாட்டிக் காப்பாற்றிய இப்போர்வீரன் யார்?" என்றார் பெரியமருது. சிட்டுவுக்கு ஏதோ ஒரு சந்தேகமோ, நம்பிக்கையோ – வீரனைப் பேசவிடாமல் "அவர் ஊமைங்க!" என்று அடிபட்ட வீரனுக்குக் கட்டுப் போட்டுக்கொண்டு தானே பதில் சொல்கிறாள்.

"முத்தழகு இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நீ ஆறுதல் அளிக்கிறாய்!" என்கிறார் பெரியபாண்டியர்.

"பாவம், நன்றியுள்ள தளபதி அவர் இப்போது எங்கே இருக்கிறாரோ?" சிட்டு இப்படிச் சொன்னதும் சின்னமருது, "அவன் நன்றியுள்ளவனா? இல்லையா? இதைக் கண்டுபிடிக்க நாட்கள் சிலதான் இருக்கின்றன" என்றார்.

அப்போது ஒரு படைவீரன் ஓடி வந்து சொல்கிறான்.

"அரசே! திருநெல்வேலிப் படை சிவகெங்கைக்குள் நுழைந்து தேவியையும் குழந்தைகளையும் ரகுநாதரையும் திருப்பத்தூர்ச் சிறைக்குக் கொண்டுபோய் விட்டதாம்."



மன்னர் சென்றபின் அரண்மனையைக் காலி செய்துகொண்டு சுரங்க வழியாக ராணிமார்களுடனும் குழந்தைகளுடனும் ரகுநாதத்தேவர் வெளியேற முயன்ற சமயம்...

வெள்ளைக் கழுகுகளின் காலடி ஓசை...இதயத்தைப் பிளந்தது...கண் இமைக்கும் நேரத்தில் அவர்கள் தப்பிவிடலாம்...ஆனால் பகைக் குலத்தின் மூலவன் வெல்ஷ் அவர்களைக் கொத்திவிட்டான். ராணிமார்களையும் குழந்தைகளையும் கைது செய்துவிட்டான். அவர்களைத் திருப்பத்தூர்ச் சிறைச்சாலையில் வைத்துவிட்டு, காளையார் கோவில் போருக்குச் சென்றான் ஆங்கிலத் தளபதி.

மஞ்சத்தில் துயின்று, தம் குழந்தைகளுக்கு நெய்யமுது ஊட்டி, அரண்மனையில் வாழ்ந்த தேவிமார், இப்போது வெஞ்சிறைக் கூடத்தில் வாடுகின்றனர். நாட்டுமக்களின் நல்வாழ்வை நாடிய ராணிமார்க்குக் கிடைத்த பரிசு, பூட்டிய வெஞ்சிறை.

என்றாகிலும் ஒருநாள் பொழுதுவிடியும் என்றெண்ணியோர்க்கு, இன்று கிடைத்ததோ மரணமேடை! புதைகுழி! கல்லறை!

நெஞ்சு வெடிக்கும் இந்த நிகழ்ச்சியை நினைத்துத் திருப்பத்தூர்ச் சிறையில் இளையராணி புலம்புகிறார்.

விடியும் விடியும் என்றிருந்தோம் – இது
முடியும் பொழுதாய் விடிந்ததடா!
கொடியும் முடியும் தாழ்ந்ததடா!
குடியும் குலமும் ஓய்ந்ததடா!

ஆம். நடப்பது அவலக் கூத்து. ஆனாலும் அஞ்சவில்லை! ஏன்?

"நோய் நொடியால் மாண்டவர்கள் கோடிகோடி–அவரில்
நூற்றிலொருபெயர் நினைவும்நாட்டில் இல்லை!
தாய்நாடு வாழ்கவென மடிந்த வீரர்
சரித்திரத்தில் பொன்னெழுத்தாய் நிலைத்து நிற்பர்!
அன்றும் இன்றும் என்றும் எந்த அன்னியர்க்கும்
அடிமையின்றி தன்னையாண்டு தான்வளர்ந்த
சிவகெங்கைச் சீமை!

இந்த உண்மையை உணர்ந்ததால்தான், சாவு கொத்தவந்தும் அவர்கள் மருளவில்லை. மறத்தி மக்கள் என்பதை உறுதிப்படுத்தினர்.

இளையராணியார் இப்படிப் புலம்பிக்கொண்டிருக்கும்போதே...தசை வெறிபிடித்த வேங்கையாய், தறிகெட்டுத்திரியும் மதவேழமாய், அங்கே வந்தான் வெல்ஷ். குழந்தைகளைப் பிடித்திழுத்துச் சென்றான். எங்கே இழுத்துச் செல்கிறான்? எவருக்குத் தெரியும்? யாரறிவார்?

இளைய ராணியின் இதயஓலம் நிற்கவில்லை.

"பாலூட்டி வளர்த்த கிளி
பறந்ததம்மா!
பசுங் கன்று திசைமாறிப்
பிரிந்ததம்மா!
தாவிவரும் மான்கன்று
விழ்ந்ததம்மா!
தாய்த்தமிழே! பகைவர்களை
மன்னிப்பாய்நீ!"

குழந்தைகளையும் மருதுவின் வீரர்களையும் வெள்ளையர் துப்பாக்கிகள் சாய்க்கின்ற ஒலி கேட்கின்றது.

★

அன்றையப் போர் முடிந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர் மருதரசர்கள். பெரியமருதரசர் மனம் வெறுத்த நிலையில் பேசினார்.

"2000 பேர்களுக்கு மேல் மடிந்துவிட்டார்கள். இப்போதுள்ள படைபலம் தாங்காது. சோதனை நெருங்கிக் கொண்டிருக்கிறது."

பெரியபாண்டியர் பேச்சு சின்னப் பாண்டியருக்குப் பிடிக்கவில்லை. அவரைத் தேற்றும் முறையில் சின்ன மருது சொன்னார்: "இல்லை அண்ணா! வெற்றி நம்மை அரவணைக்கத் துடிக்கிறது. மருதுபாண்டியர் வீர வரலாற்றை நாடு புகழ்ந்து பாடும் காலம் வந்துகொண்டிருக்கிறது!"

அந்தக் காலம் வருவதற்கு முன்னதாகச் சிறுவனின் பிணம் சுமந்த குதிரை ஒன்று வந்தது.

பெரியவரும் சின்னவரும் குதிரையை அணுகிப்பார்த்தனர்! ஐயகோ! அவலமே! வெற்றிமகள் அரவணைக்கத் துடிக்கிறாள் என்ற நேரத்தில் வந்தது துடிக்க வைக்கும் சேதியா? குதிரையின்மேல் கிடந்தவன் குண்டுகளால் துளைக்கப்பட்ட **துரைசாமி!**

மன்னர் மருகினார்; மயங்கினார்; தவித்தார்; அழுதார்; அவர் தன் வாழ்வில் கண்ணீர்விட்டறிந்ததும் அன்றுதான்.

"துரைசாமி! சிவகெங்கை முடியைச் சூடவேண்டிய நீ போய் விட்டாயா? இனி யாருக்கடா முடிசூட்டுவோம்? யாருக்கடா முடி சூட்டுவோம்?"

★

"இனிமேல் சிவகெங்கைக்கு உடையணரே மன்னர்! அவருக்கு முடி சூட்டுகிறேன்!" என்று சூட்டுகிறான் மேஜர் வெல்ஷ். கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் கருணாமூர்த்தி அவன்!

உடையணரின் முகத்தில் ஆனந்தம் பொங்கி வழிகிறது; தொண்டையில் ஆணவம் கொக்கரிக்கிறது.

"நகரத்து மக்களை வாழ்த்துப்பாடச் செய்! நடனமாடச் சொல்!" அதிகாரக்குரல் வெடிக்கிறது!

"நகரத்தில் மக்களே இல்லையே பிரபு!"

பணியாளனின் பரிதாபக் குரல் இது.

"ஏன் இல்லை! நான் அழைத்துவருகிறேன்!" என்று வெளியேறுகிறான் சின்னச்சாமி.

★

★ போர்முகத்தில் புலிமறவர்! ★

'இன்று கடைசி நாள்!"

"ஆமார்! முத்தழகுவைக் காணோம்!" மருதரசர்கள் நம்பிக்கையிழந்து பேசிய செய்தி கேட்ட அந்த வீரனின் நொந்த உள்ளம் சந்து சந்தாய் வெடிக்கிறது. இடியுண்ட பசுந்தளிராய்க் கருகிய அவன், "அரசே! இதோ கிடக்கிறேன் முத்தழகன்!' என்று கூறித் துடிக்கிறன். ஊமை பேசுகிறன்.

"சொன்ன தவணைப்படிக் கள்ளனைக் கொண்டு வந்து சேர்க்காத எனக்கு என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்!" என்பது போல் இருந்தது அவன் பேச்சு! இன்று கடைசி நாள்! கணவனைக் காணோம் என்று திண்டாடி யலேந்த கண்ணுத்தாள் பார்வையில் அவன் பட்டுவிட்டான் உடையணருக்கு வாழ்த்துப்பாட, மக்களைத் திரட்ட வந்தவன் அவள் கண்களில் பட்டுவிட்டான் அவள் அவனை நிறுத்தினுள். தம்பிக்கு-நம்பிய நல்லவனுக்குத் தீங்கு செய்த அவனைக் கண்டித்தாள். அவன் சீறினுன்! அவள் கேட்டாள், கேள்வி பல.

கண்ணுத்தாள் : நில்லுங்கள்! எங்கே போகிறீர்கள்?

சின்னச்சாமி : அதை எதற்கு நீ தெரிந்துகொள்ள வேண்டும்? மரியாதையாக விட்டுக்குப் போ.

கண் : வீடு எங்கே இருக்கிறது? வீட்டில் யார் இருக்கிறர்கள்?

சின் : நாளை வருகிறேன் நான்...

கண் : தம்பி துரோகியாமே!

சின் : நம்பியவர்களுக்கு வேறு என்ன பெயராம்!



கண் : இன்று நாற்பத்தி ஐந்தாம் நாள். ஒழுங்காக உழைத்தவன் துரோகியாக சாகப்போகிறன். துரோகம் புரிந்துவிட்ட உங்களோடு நான் வாழப்போகிறேன்.

சின் : மடையன் அவன் ஏன் அங்கே இருக்கிறன். இங்கே வரச் சொல் இன்னுமொரு பதவி காத்திருக்கிறது.

கண் : பொய்ப்பட்டம் எதற்கு, உண்மையிலேயே துரோகியாகி விடட்டும் என்கிறீர்களா!

ஒரு இடத்து தியாகம் மறு இடத்து துரோகம். இடத்தையும் நேரத்தையும் பொறுத்து துரோகம் தியாகமாகும். தியாகம் துரோகமாகும் கண்ணுத்தா!

கண் : தத்துவத்தை நிறுத்துங்கள். தம்பியைக் காப்பாற்றுங்கள்.

இன்று கடைசி நாள்! இன்று கடைசி நாள்!

சின் : கொன்றுல் என்ன? சாவான்! செத்தால் என்ன? தம்பி தானேஅவன்; நானிருக்கிறேன். நீயிருக்கிறுய். நாளை நமக்கே ஒரு குழந்தை பிறக்கிறது. கவலையை விடு.

கண் : வளர்த்தது மனித பாசமில்லாத நீங்கள்? அதிகார வெறியில் ரத்தபாசம் கூடச் செத்துவிட்டதா? மயிர்நீப்பின் வாழாக்கவரிமான் சாதியில் மானங் கெட்டவரும் ஒரு அங்கமா?

சின் : கண்ணுத்தா!

கண் : காட்டிக்கொடுக்கும் கயவர்களைக் கணவர்களாகப் பெற்றவர்களும் பெண்களா? வல்லயமும் ஈட்டியும் தாங்கி வஞ்சகர்களை வீழ்த்தும் மரபில் சூதும் சூழ்ச்சியும் நடத்தி ஆட்சியைக் கைப்பற்றும் துரோகிகளும் வாழ்வதா?

சின் : கண்ணுத்தா!

கண் : சகோதரர்களைப் பலி கொடுத்துத் தன்னை வாழ வைத்துக் கொள்ளும் குணம் நாய்களிடம்கூட இல்லையே.

சின் : கண்ணுத்தா! நீ என் மனைவி!

கண் : அந்த பந்தம் அறுபட்டு நாட்கள் நாற்பதுக்குமேல் ஆகிவிட்டன! மானம்காக்கும் மறத்தி நான். முறத்தினுல் புலியை விரட்டும் மொய்வரைப் பெண்கள் பரம்பரை நான்!

சின் : பேசாதே!

கண் : காட்டிக்கொடுப்பவன் கணவனுயினும் அவனை வாட்டி எடுக்கும் தேவி நான்!

சின் : கண்ணுத்தா! சாகாதே.

கண் : வந்திருப்பது உங்கள் மனைவி அல்ல. கீழக்கோட்டைக்காளி நீதி கேட்க வந்திருக்கிறுள். கண்ணகி இங்கே களங்காண வந்திருக்கிறுள்.

சின் : கண்ணுத்தா!

கண் : மருதரசரிடம் மன்னிப்புக் கேட்கிறீர்களா? இல்லை, இங்கேயே மடிகிறீர்களா? இங்கேயே மடிகிறீர்களா!

பெண்டிர் குலவிளக்கு பிணமாக்கினுள் கணவனை! பின் அவனைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டாள்.

★

முத்தழகு சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியாது வாடி வதங்கினுன். "தன் நல்ல உள்ளத்தை நிரூபிக்க முடியவில்லையே!" என்று புழுங்கி அழுதான். அவன் அழுத அழுகைக்கு ஒரு முடிவாய் அங்கே கண்ணுத்தாள் தோன்றினுள். அவள் தன் கடமையை முடித்துவிட்ட பெருமையில் மருதரசர்முன் நின்றுள். துரோகி சின்னச்சாமியைப் பிணமாகக் கண்ட அவர் முத்தழகுவையும் நம்பினுர்; தன் நாட்டுப் பெருமை காத்த கண்ணுத்தாளையும் வாழ்த்தியது அவர் உள்ளம். கண்ணுத்தாள் தன் கடன் முடித்துவிட்ட இன்பத்தில் மாண்டுவிட்டாள்.

★

பகைக்குலம் நெருங்கி வரவே படை சிதறியது. மானங்காத்த மருது பாண்டியர் கைதாயினர். முத்தழகு அகப்படவில்லை. முத்தழகு எங்கே?

முத்தழகு எங்கே? அவன் போர்முகத்தில் காணமுடியாத அவலத்தை எல்லாம் கண்டுவிட்டான்.

"முத்தழகு மட்டும் தப்பிவிட்டான். ஊமைத்துரையைப் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு செல்லுங்கள்.

மருதுபாண்டியரைத் திருப்பத்தூர்ச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோக வேண்டும்.

அத்தோடு தப்பி ஓடிய முத்தழகைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்!" என்று ஆணையிட்டான் மேஜர் வெல்ஷ், தன் முகாமிலிருந்தவாறே! காளையார்கோவிலில் முத்தழகுவின் திருமணம் நடக்கப்போவதாய், அறிந்தோர் சொல்லப் படை விரைகிறது.

முத்தழகு என்ன செய்வான்? எங்குப் போவான்? அண்ணனைக் கண்டுபிடித்துத் தரவேண்டிய நாள் நெருங்குகிறது. போருக்குப் போவதானுலும் சிட்டுவை மணந்துவிட்டுச் செல்லவேண்டிய நிலை. குறித்த நாளன்று எப்படியும் மணந்துவிட்டுப் போருக்குப் போவதாக ஒப்பியிருந்தான். ஒருபுறத்திலே போர்க்களம். மறுபுறத்திலே மணமேடை. இவற்றிற்கெல்லாம் மேலாக எதிர்காலம் என்ன என்ற வினுக்குறி!

இருதலைக் கொள்ளியிடைப் பட்ட எறும்பானுன் முத்தழகு. அவன் எந்த முடிவெடுப்பதானுலும் வாளின் மேல் நடக்கவேண்டிய நிலைக்கு ஆளானுன். திருமணத்தை முடித்துவிட்டு அந்தக் கையோடு மறுபடியும் போருக்குச் செல்ல வேண்டியது என முடிவு செய்கிறன்.

மணமேடை அலங்கரிக்கப் பட்டுவிட்டது. மாவிலைத்தோரணங்கள் இருக்கின்றன; வாழைமரங்கள் நிற்கின்றன; நிலாமடைத்தாழியும் ஒளிவிளக்குகளும் உரிய இடங்களில் இருக்கின்றன; அலங்கரிக்கப்பட்ட மணமகளும் இருக்கிறுள். மணமகனை மட்டும் காணோம். அனைத்தும் ஆடாத அரங்கம்; மலர்சூடாத மங்கை.

நம்பிக்கை தவிடுபொடியாகி விடுமோ என்றிருக்கும் நேரத்தில் முத்தழகன் வந்து சேர்ந்தான். சொன்ன சொல்லின்படி வந்து சேர்ந்த அவன் அவளை மணந்தான். ஊரும் உறவும் சூழ்ந்திருக்க, ஒக்கலும் மக்களும் வாழ்த்திவர, கோலாகலத்துடன் நடக்கவேண்டிய மணவிழா அமைதிகொத்த நடந்தேறியது.

மணம்முடிந்த மறுகணமே அவன் போருக்குப்போக விடை கேட்டான். மணம் கொஞ்சும் எழில் வாழ்வென்பார்கள்-அதை மறந்து - துறந்து ஓடுகிறன் போருக்கு. நாட்டுநிலை உணர்ந்த அவள் அதைத் தடுக்கவா முடியும்? வீட்டுக்கொரு ஆண்பிள்ளையும் ஈட்டுக்கொரு தமிழ்மறத்தியும் போர் முனைக்குச் செல்லவேண்டிய கட்டம்-செங்குருதி சிந்தவேண்டிய நாள். இது! அவள் தன் கடமையை மறக்கமுடியுமா? திண்டாடினுள். அவள் இந்த உலகில் இல்லை. பயங்கரக் கனவுலகு ஒன்றில் உழல்கிறுள்.

மணமேடையை அலங்கரித்த வாழை மரங்கள் கருகுகின்றன. சூடியுள்ள ரோஜா மாலையின் இதழ்கள் உதிர்கின்றன. சாவு முழங்கி வருகிறது. அழிவு கோரக் கூத்தாடுகிறது. அங்கே அவலம் உரத்த குரல் எழுப்புகிறது. இப்படியான ஒரு பயங்கரக் கனவை எண்ணிப் பாருங்கள். ஆம் அப்படிப்பட்ட பயங்கரக் கனவைத்தான் அவள் மனக்கண் கண்டதாகப் பாடுகிறது. அவனும் அக்கொடிய துன்பத்தை உணர்கிறன். ஆனுலும் என் செய்ய முடியும்? காலம் காட்டும் வழியில் அவன் செல்கிறன். மனம் நொந்து செல்கிறன். இதயம் வெந்து செல்கிறன்.

தம் குல வழக்கப்படி மணவாளனுக்கு வாய்க்கரிசி போட்டு வழியனுப்புகிருள். ஆம்! அவர்களைப் பொருத்து, காலம் மலரவில்லை; கழுத்தில் மாலை விழுந்ததென்று சிரித்திருக்க முடியவில்லை; ஞாலம் தமக்கு என்று தலைநிமிர முடியவில்லை அத்துணையும் கனவாகப் போயின. வானத்தில் சமைத்த மாளிகையாய்-காற்றில் கட்டிய கோட்டையாய் ஆகிவிட்டன ஆசைக் கனவுகள்.

எண்ணரும் தொல்லைகள் இதர் தரும் புது வாழ்வைக் குலைக்கின்றன. கடமை பெரிது என்ற எண்ணம் அந்தக் கவலைகளை மறைத்துவிடுகின்றன.



திருமணம் முடித்த முத்தழகு மனைவியிடம் விடை கேட்கிருன் அவள் கலங்குகிருள். மணந்த மறுகணமே பிரிவ தென்ருல் மங்கை எவள்தான் பொறுப்பாள்? முத்தழகு தேற்றியபின் மனம் பொருமலே வாய்க்கரிசி கொடுத்துக் கணவனை வழியனுப்புகிருள். மணவறையைவிட்டு வெளியே வந்ததும் பகைக்கூட்டம் அவனைக் கொத்திவிட்டது. வாளைச் சுழற்றினர் ஆங்கிலேயர் கூலிகள். அவனும் சுழற்றினுன். வாளும் வேலும் மட்டும் மோதவில்லை அங்கே! அடிமை கொள்ளத் துடிக்கும் ஆணவமும், அதை எதிர்த்த மறக்குலமும் அங்கே மோதின. ஆயிரம்முகத்தான் அகன்றதாயினும் பாயிரம் இன்றிப் பனுவல் இன்றே? மடை உடைத்த வெள்ளமாய்க் கிளம்பிய வெள்ளைப்பகைக்கு முன்னர் தனி ஒருவனுய் நின்று எத்தனைநேரம் அவன் போராடமுடியும்? கைப்பற்றி விட்டனர் அவனை! சிட்டு கதறக் கதற அவள் காதலன்-அன்பு நாயகன், பரங்கியர் கைதியாகிவிட்டான்.

முத்தழகுவும் கடைசியில் பிடிபட்டுவிட்டான்! வெல்ஷின் முகத்திலே இப்போது பூரண மகிழ்ச்சி! அவன் விருப்பப்படி வெள்ளையர் ஆட்சி நிலைத்துவிட்டது; விரோதிகள் மடிந்துவிட்டனர்; இனி என்றென்றைக்கும் தாசானுதாசனுய் இருக்கக்கூடிய உடையணா கிடைத்துவிட்டார். அந்த மகிழ்ச்சிப் பெருக்கில் ஆணையிட்டான் மூவரையும் தூக்கிலிட.

"தாய்நாடு வாழ்க!" என முழங்கினர்.

"தன்மானம் தழைக்கட்டும்!" என குரல் கொடுத்தனர்.

"அடிமை விலங்கறுப்போம்!" என ஆர்ப்பரித்தனர்!

"ஆங்கிலேயர் ஆதிக்கம் ஒழிக!" என முரசறைந்தனர்!

சின்னமருதரசரின் கருத்துரைகள் இவை:

"இன்று எங்கள் வீரம் தூக்குமேடையில் முடிவடைகிறது. எந்த வீரனுடைய சரித்திரமும் இன்பத்தில் முடிவடைந்ததில்லை. இந்தப் பலிபீடத்திற்கு நாங்கள் புதியவர்கள் அல்லர். நரைத்துத் திரைத்து, கூன்விழுந்து குருடாகி இழுத்துக் கிடந்து மடிவதைவிட இந்த முடிவிலே பெருமை அதிகம். எங்கள் சமுதாயம் ஒரு நாள் எழுச்சி கொள்ளும்! பொங்கும் தமிழர் வெள்ளம் பகைவரின் பூண்டறுக்கும்! காலம் மாறும்! எங்கள் தாயகம் வெல்லும்!"

மாற்ருருக்கு மாளாத துன்பத்தைத் தந்தான்; அடிதாளாத போக்கைக் காட்டினுன், முத்தழகன். அவன் சிந்திய வீரத்தொடர்கள் இவை:

"செந்தமிழ் நாட்டாரே! தென்னகத்து வீரர்களே! பொங்கும் பெருங்கருணைப் புகழ் வளர்க்கும் அன்னையரே! பூமி பிறந்த பொழுதினிலே நாம் பிறந்தோம்! போர்க்களமே வீடாக, பொழுதெல்லாம் புகழ் வளர்த்தோர்! சாக்காடு வீரருக்கோர் பூக்காடு! தலை நிமிரும் பரம்பரையை தழைக்க வைக்கும் மலர்க்காடு!

குழந்தை இறந்தாலும், குறையாகப் பிறந்தாலும் வாள் கொண்டு கீறி மண்ணில் புதைப்பதுதான் நமது தமிழ்ச் சாதி, நாடும் பொது நீதி! மன்னர் இருவரை மரணம் அழைத்தது. இன்னும் ஒருவன் இருக்கிறேன் இங்கே!

அந்நியனை யார் நீ என்ருேர்! திருடனை "திருடனே" என்ருேம்! நாங்கள் குற்றவாளிகளாம! நாட்டு விடுதலை கேட்பது குற்றமென்ருல், பகைவர் பூட்டிய விலங்கை உடைப்பது குற்றமென்ருல், கொள்ளைக்காரனை உதைப்பது குற்றமென்ருல், நண்பர்களை ஆதரிப்பது குற்றமென்ருல், இந்தக் குற்றவாளிகள் நாடெங்கும் பெருகட்டும்! சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கமும் இந்தக் குற்றவாளிகளாக மாறட்டும்! சுரண்டும் கூட்டத்தைத் தூள் தூளாக்கட்டும்! துரோகிகள் கூட்டத்தைக் களைந்தெறியட்டும்! அண்டி வாழும் அன்புச் சமுதாயத்தை மண்டிவரும் இருட்காடு மறையட்டும்! எழுந்தது உணர்ச்சி என்று இளம் பரிதி கிளம்பட்டும்! முற்ருல் முடியாமல் இதே கதை தொடரட்டும்! முரசொலிக்கட்டும்! நம் நாடு தழைக்கட்டும்! மன்றத்திலே எங்கள் மக்கள் வெள்ளம் கூடட்டும்!

"சொந்தச் சோதரரைக் காட்டிக்கொடோம்!" என்று சூளுரைத்தனர். இவை குற்றமாம்! இவை தவருர்! இவை கூடாதனவாம்! ஆகாதனவாம்! கொக்கரித்த ஆங்கில ஆதிபத்தியத்தின் 'நியாயத் தீர்ப்பு" இது!

தீர்ப்பின்படி, திராவிட விடுதலை மறவர் தூக்குமேடையில் ஏற்றப்பட்டனர். மரணமேடையில் தங்கள் பொன்னுன வாழ்வு நிறுத்தப்பட்டும் அன்னுர் அஞ்சவில்லை. நாட்டுரிமைக்காக மாளல் நன்ரேயன்ருே?

தூக்குமேடையில் அந்தத் தூயமாமணிகள் சிந்திய மணிமொழிகளை-கருத்துரைகளை-வீரத்தொடர்களைக் கேண்மின்!

பெரியமருதரசரின் மணிமொழிகள் இவை:

"தாயகமே! தன்மானத் தமிழ்க்குலமே! வரவு கூறும் வாசலில் நின்ற பெரியமருது பிரிந்துபோகும் பாதையில் நிற்கிருன் இப்போது! அண்டி வந்த நண்பனுக்கு ஆதரவளித்தவன் அணைக்கத் துடிக்கும் தூக்குக்கயறின் அருகில் நிற்கிருன் இப்போது. நண்பனுக்காகப் போரிட்டேன். நாட்டுக்காக மடிகிறேன்! சரித்திரத்தில் ஒரு ஏடு பாக்கியிருக்கிறது. எங்கள் பெயரை அதிலே தங்கத்தால் எழுத இங்கே அழைத்து வந்திருக்கிருர் மேஜர் வெல்ஷ். வீர வரலாறு தொடரட்டும்! விடுதலை உணர்ச்சி வளரட்டும்! துரோகிகள் படலம் முடியட்டும்! இந்தத் தூக்குமேடையே விடுதலை வீரர்களின் கடைசி மேடையாக இருக்கட்டும்!"

துரோகக் கும்பல் இனிமேல் ஒழியட்டும்! மலரட்டும் விடுதலை, மலரட்டும்! தவழட்டும் தென்றல், தவழட்டும்! வாழட்டும் தென்னகம் வாழட்டும்! உயரும் தமிழ் மகளே, உனக்கிந்த நாடென்று உதய சூரியன் ஒளி பரப்பட்டும்!"

உரிமை முழக்கி நின்ருேரின்-உயர்வு தமக்கே என்ருேரின் வாழ்வு முடிந்துவிட்டது! இதயத்தைப் பிய்க்கும் இந்தக் கொடுமை காணுது சிட்டு ஆடினுள்; அலமந்து ஆடினுள்; மறத்தி மகள் ஆடினுள்! ஆம், அதுதான் அவள் வாழ்வின்இறுதி ஏடு!

காலத்தின் கண்ணீர் தண்ணீராக விழுந்தது!

கதை முடிந்தது;

ஆனுல் சரித்திரம் தொடர்ந்தது. விடுதலை வேள்வி வளர்ந்தது. வீரமுழக்கம் நாடெங்கும் கேட்டது. மருதுபாண்டியரின் அடிச்சுவட்டிலே தமிழகத்தின் மக்களெல்லாம் நடந்தனர்.

துணைக்கண்டம் முழுவதுக்குமே ஒரு தூய தலைவன் தோன்றினுன். ஏகாதிபத்திய இருள் மறைந்தது. சுதந்திர சூரியன் கிளம்பினுன். உள்ளங் குளிர உதயசூரியன் வாழ்த்துக்கள் பாடினுன்.

தமிழ் வாழ்க! தமிழகம் வாழ்க!

வணக்கம்.

"வேல்மறவர் பெரும்படைக்கு, வேலை வந்துவிட்டது!"

என்ற

சேதி சொல்லும்

கண்ணதாசன் புரடக்ஷன்சாரின்

சிவகெங்கைச் சீமை

தென்னாடெங்கும்
மே 22 முதல்

சென்னை-
ஸ்ரீ கிருஷ்ணா
பாரகன்
உமாவில்
மே 19 முதல்

நடக்கிறது.

ADVT.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சு.ப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.